# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 258 பிலவ வருடம், ஆனி மாதம் 04ஆம் திகதி வெள்ளிக்கிழமை (18.06.2021) ஹிஜ்ரி - 1442, ஜில்ஹாயிதா பிறை - 06, 0115886187 - பக்கங்கள் 08

விலை ரூ.30


## நக்கல் நமசிவாயம்

ஒன்லைனில காச கட்டியாவது நாட்டின்ர பொருளாதாரத்த காப்பாத்த குடி மக்களுக்கு அரசாங்கம் ஒரு சந்தர்ப்பத்த கொடுக்கேல்ல பாருங்கோ...



# ஒன்லைன் மது விற்பனைக்கு

## அனுமதியளிக்க அரசு மறுப்பு



ஒன்லைன் ஊடாக மதுபானம் விற்பனைசெய்வதற்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்துள்ளதாக கொவிட் – 19 தொற்று ஒழிப்புக்கான தேசிய செயலணியின் பிரதானி, இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொவிட் -19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு நிலையம், ஒன்லைன் ஊடாக மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதி மறுத்துள்ளது.

ஒன்லைன் ஊடாக மதுபானம் விற்பனைசெய்ய நிதியமைச்சு நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியிருந்தது.

குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கொவிட் -19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு நிலையத்திடம் முன்வைத்திருந்தது.

எவ்வாறாயினும் கொவிட் -19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு நிலையம் நேற்று அதற்கு அனுமதி வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளது.

# ஆபத்தான கொரோனா திரிபு சமூகத்திற்குள்!

## இந்திய டெல்ட்டா திரிபுடைய 5 பேர் கொழும்பில் அடையாளம்

## எப்படி ஊடுருவியது என்பது குறித்து அதிகாரிகள் தீவிர ஆய்வு

02≫

# ஒட்சிசன் தேவை எகிறுகிறது:

## மருத்துவர்கள் அபாயச் சங்கு!

### நிலைமை மோசம் என்கிறார் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம்

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்று தீவிரத்தினால் ஒட்சிசன் தேவையின் அளவு சடுதியாக அதிகரித்துள்ளது. ஜூன் முதலாம் திகதி முதல் 15ஆம் திகதிவரை வரை ஒட்சிசன் தேவை ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை 400 ஆக காணப்பட்ட நிலையில், தற்போது, 800 ஆக உயர்வடைந்துள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று...

02≫

# கூட்டமைப்பினருடன் இந்தியத் தூதுவர் பேச்சு



நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஐந்துபேரடங்கிய குழுவினர் இந்திய உயர்ஸ்தானிகரை நேற்று இந்திய இல்லத்தில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையின் அபிவிருத்தி, அதிகாரப்பகிர்வு குறித்து இச்சந்திப்பில் பேசப்பட்டுள்ளது. 13ஆவது திருத்தத்துக்கமைவாகவும் ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள்ளும் சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்யும் இலங்கையின் நல்லிணக்கத்துக்கு இந்தியாவின் நிலையான ஆதரவை உயர்ஸ்தானிகர் இச்சந்திப்பில் எடுத்துரைத்துள்ளாரென இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பொன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் தவிர்த்திருந்த நிலையில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹபராதுவவில் தடுப்பூசி திருட்டு

## - இருவர் கைது -



ஹபராதுவ சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் 30 சினோபார்ம் தடுப்பூசிகள் திருடப் பட்ட சம்பவம் தொடர் பில் காலி குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

90,000 ரூபா பெறுமதியான தடுப்பூசிகள் திருடப்பட்டமை தொடர்பில் அலுவலகத்தின் சாரதி மற்றும் சிற்றூழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹபராதுவ சுகாதார வைத்திய அதிகாரியின் முறைப்பாட்டிற்கமைய விசாரணைகளை முன்னெடுத் துள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# எம்.பி.மாருக்கான வாகன இறக்குமதிக்கு எதிராக மனு

### உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்குரிய தீர்மானத்திற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினரால் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று நாடளாவிய ரீதியில் வியாபித்து, மக்கள் துன்பங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக 227 சொகுசு வாகனங்களை இறக்குமதிசெய்ய அரசாங்கத்தினால்....

02≫

# பாராட்டு - கவலை - கோரிக்கை மூன்றையும் ஒருசேர டக்ளஸிடம் தெரிவிக்கும் மனோ



13ஆம் திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு உரித்தான மருத்துவமனைகளை மத்திய அரசு சுவீகரிக்கும் தீர்மானத்தை அமைச்சரவை மேற்கொண்டமை அரசியலமைப்புக்கு முரணானது என்பதை அமைச்சரவையில் சுட்டிக்காட்டினேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளமை பாராட்டுக்குரியது. ஆனால், அதற்கான காரணமாக தமிழ் மக்கள் தனது கட்சிக்கு வாக்களித்து, தனக்கு அரசியல் பலத்தை தராமையே எனவும் அவர் மேலும் கூறியுள்ளமை கவலைக்குரியது.

உண்மையில் ராஜபக்ஷ அரசின் “அதிகாரப்பரவலாக் கலுக்கு” எதிரான பெருந்தேசியவாத நிலைப்பாடே இதற்குக் காரணம். எனவே, அமைச்சர் இதுபற்றி தனது அரசுக்குள்ளே விடாமல் போராடவேண்டும். அவருக்கு அரசுக்குள்ளே...

02≫

# மூன்று நகர சபைகளின் தவிசாளர்களுக்கு ஆப்பு

## ஐ.தே.க. உறுப்புரிமையை கைவிட்டதால்

நாவலப்பிட்டி, தங்காலை மற்றும் வெலிகம நகர சபைகளின் தவிசாளர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை நிறைவுறுதியுள்ளமையால், நகர சபைகளின் உறுப்புரிமைகளையும் அவர்கள் கைவிட்டுள்ளதாக அதிவிசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாவலப்பிட்டி நகர சபைத் தவிசாளர் சசங்க சம்பத் சஞ்ஜீவ, தங்காலை நகர சபைத் தவிசாளரான ரவிந்து தில்ஷான் ஆகியோரும் உறுப்புரிமையையும் கைவிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

02≫

## பயணத்தடை நீக்கப்பட்டதன் பின்னரும்

# பல்கலைகளுக்கு விண்ணப்பிக்க அனுமதி

2021ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதற்கு பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதன் பின்னரும் சந்தர்ப்பம் வழங்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்காக ஒன்லைன் மூலம் விண்ணப் பிப்பதற்கு வழங்கப்பட்ட காலஅவகாசம் இன்றுடன் நிறைவடைவதாக ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

02≫

## தமிழன் வாரவெளியீட்டை நாளை சனிக்கிழமை காலைமுதல் பத்திரிகை முகவர்களிடம் பெறலாம்






# எதிர்க்கட்சிகள் கொண்டுவருவது நம்பிக்கையுள்ள பிரேரணை

## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு



•யோ.தர்மராஜ்

எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 10 குற்றச்சாட்டுகளும் அடிப்படையற்றவை. எனவே, நம்பிக்கையில்லா பிரேரணை என்ற பெயரில் நம்பிக்கையை உறுதிப்படுத் தும் யோசனையை கொண்டுவந்ததற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நன்றி என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

02≫

# டெங்கு நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடன் வைத்தியரை நாட ஆலோசனை

## தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்



டெங்கு மற்றும் கொரோனா நோய்கள் ஒரே மாதிரியான நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தக் கூடியவை என்பதால், நோய் அறிகுறிகள் தென்படும் முதல் சந்தர்ப்பத்திலேயே வைத்தியர் ஒருவரை சந்தித்து ஆலோசனை பெற்றுக்கொள்ளுமாறு தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

02≫



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை நேற்று மாலை புது டில்லியில் சந்தித்தார். முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற முதல் சந்திப்பு இதுவாகும்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 10 பேருக்கும் 30ஆம் திகதிவரை விளக்கமறியல்

***கனகராசா சரவணன்***

மட்டக்களப்பு, கல்குடா கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட 10 பேரையும் தொடர்ந்து எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எதிராக லவக்குமாருக்கு நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்ட நிலையில், அவர் உட்பட 10 பேர் அன்றைய தினம் நீதிமன்ற தடையுத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச்சுடர் ஏற்றி, கடலில் பூக்களைத் தூவி அஞ்சலி செலுத்தி, அதனை படமெடுத்து முகநூலில் பதிவுசெய்த நிலையில் அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கல்குடா பொலிஸார் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்ற அனுமதியைப்பெற்று 3 நாட்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை மேற்கொள் எப்பட்டு பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்

இதனையடுத்து நேற்று முன்தினம் குறித்த வழக்கு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் விசாரணைக்காக எடுக்கப்பட்ட போது குற்றஞ்சாட்டப்பட்வர்கள் 10 பேரின் சார்பில் சட்டத்தரணி சுகாஸ் ஆஜராகிய நிலையில், பயணக்கட்டுப்பாடு மற்றும் கொரோனா தொற்று காரணங்களால் நீதிமன்றத்துக்கு அழைத்துவர முடியாத நிலையில் அவர்களை 30ஆம் திகதிவரை 14 நாட்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# வவுணதீவில் கள்ளச்சாராய உற்பத்தி நிலையம் முற்றுகை; மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் உட்பட நால்வர் கைது





***கனகராசா சரவணன்***

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் விசேட நடவடிக்கையில் சில்லுக்கொடியாற்றுப் பகுதியில் கள்ளச்சாராயம் உற்பத்தி நிலையமொன்று நேற்று முன்தினம் நள்ளிரவில் சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது, கள்ளச்சாராயம் உற்பத்தியில் ஈடுபட்டவர், கள்ளச்சாராய வியாபாரி மற்றும் கஞ்சாவுடன் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் உட்பட 4 பேரை கைது செய்துள்ளனர்.

75 வீற்றர் கள்ளச்சாராயம், 3 ஆயிரத்து 400 லீற்றர் கோடா கள்ளச்சாராயம் உற்பத்தி உபகரணங்கள் மோட்டார்சைக்கிள், உழவு இயந்திரம் என்பன மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசந்த அப்புஹாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவு பி.லோஜிதன் ஜெயசுந்தர ஆகியோரின் தகவலுக்கமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய வவுணதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி நிசாந்த அப்புஹாமி தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசேட முற்றுகை நடவடிக்கை ஒன்றை சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு ஆரம்பித்தனர்.

இதன்போது பன்சேனை சில்லுக்கொடியாற்றுப் பகுதியில் கள்ளச்சாராயம் உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டபோது அங்கு கள்ளச்சாராயம் உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்ததுடன், 17 பீப்பாய்கள், 3 ஆயிரத்து 400 லீற்றர் கோடா மற்றும் கள்ளச்சாராயம் உற்பத்தி உபகரணங்களையும் மீட்டனர்.

அதேவேளை, கள்ளச்சாராய உற்பத்தி நிலையத்திலிருந்து 3 கான்களில் 75 லீற்றர் கள்ளச்சாராயத்தை மோட்டார்சைக்கிளில் எடுத்துச்சென்ற கள்ளச்சாராய வியாபாரி ஒருவரை கைதுசெய்ததுடன், 75 லீற்றர் கள்ளச்சாராயம், மோட்டார்சைக்கிள் ஒன்றையும் மீட்டுக்கொண்டு அங்கிருந்து வெளியேறும்போது சட்டவிரோதமாக ஆற்றில் உழவு இயந்திரத்தில் மண் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை கைதுசெய்ததுடன், உழவு இயந்திரத்தை மணலுடன் மீட்டனர்.

அதனைத் தொடர்ந்து பரித்திச்சேனையில் 2 ஆயிரம் மில்லிகிராம் கஞ்சாவுடன் 19 வயது இளைஞர் ஒருவர் உட்பட 4 பேரை இந்த விசேட நடவடிக்கையில் கைதுசெய்துள்ளதாகவும் நேற்று இரவு 9 மணியிலிருந்து ஆரம்பித்த அந்த விசேட நடவடிக்கை நேற்று வரை இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பாராட்டு - கவலை,...

இருக்கும் ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள், இது தொடர்பில் ஆதரவளிக்க வேண்டும். இது எம் கோரிக்கை - என தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கூறியுள்ளார். இதுபற்றி மனோ எம்.பி. மேலும் விவரித்து கூறியுள்ளதாவது,

அமைச்சரவை தீர்மானத்தின்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசு சுவீகரிப்பது தொடர்பில் முடிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தின்படி கிழக்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, மேல் மாகாண வைத்தியசாலைகளும் பறிக்கப்படும். ஆகவே, இவை பற்றி வடக்கில், கிழக்கில், மலையகத்திலிருந்து அரசுக்குள் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் மற்றும் சமகாலத்தில் எதிரணியிலிருந்து அரசு பக்கம் சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.பிக்களும் தமது எதிர்ப்புகளை காட்ட வேண்டும்.

உண்மையில், 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்செய்யும்படியே இந்திய அரசாங்கம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம், ஐரோப்பிய நாடாளுமன்றம் என்பவை கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை திரும்பத் திரும்ப கூறுகின்றன.

13ஆம் திருத்தத்தை முழுக்க அமுல்செய்வதை நிறுத்தியது ஒருபுறமிருக்க, இப்போது இருப்பதையும் பறிக்கும் செயன்முறையை இந்த அரசு மேற்கொள்கிறது. இது நிச்சயமாக, இந்திய அரசுடனான உறவு, செப்டம்பரில் அடுத்துவரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் வாய்மொழி அறிக்கை, ஐரோப்பிய நாடாளுமன்ற ஜிஎஸ்பி+ விவகாரம் ஆகியவற்றில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அமைச்சர் தனது ஜனாதிபதிக்கு எடுத்துக் கூற வேண்டும். பார்க்கப்போனால், இந்த ஜனாதிபதிக்கு உள்நாட்டு அரசியல் சட்டமும் தெரியவில்லை. இலங்கை பற்றிய வெளிநாட்டு நகர்வுகளும் தெரியவில்லைபோல் எமக்குத் தெரிகிறது.

13ஆம் திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு உரித்தான மருத்துவமனைகளை மத்திய அரசு சுவீகரிக்கும் தீர்மானத்தை அமைச்சரவை மேற்கொண்டமை அரசியலமைப்புக்கு முரணானது என்பதை அமைச்சரவையில் சுட்டிக்காட்டினேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளமை பாராட்டுக்குரியது.

ஆனால், அதற்கான காரணமாக தமிழ் மக்கள் தனது கட்சிக்கு வாக்களித்து, தனக்கு அரசியல் பலத்தை தராமையே எனவும், அது தமிழ் மக்களின் தீர்க்கதரிசனமற்ற தீர்மானமே எனவும் அவர் மேலும் கூறியுள்ளமை கவலைக்குரியது.

உண்மையில் ராஜபக்ஷ அரசின் "அதிகார பரவலாக்கலுக்கு" எதிரான பெருந்தேசியவாத நிலைப்பாடே இதற்குக் காரணம். எனவே, அமைச்சர் இதுபற்றி தனது அரசுக்குள்ளே விடாமல் போராட வேண்டும். அவருக்கு அரசுகுள்ளே இருக்கும் ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள் இது தொடர்பில் ஆதரவளிக்க வேண்டும்.

இந்நாட்டில், அதிகாரப்பரவலுக்காக தமிழ் மக்கள் சிந்திய இரத்தம், கொடுத்த விலை என்பவை சில அமைச்சரவை தீர்மானங்களால் சுலபமாக பறிபோகக்கூடாது. இந்த உண்மை, அரசில் இருக்கும் தமிழ், முஸ்லிம் முழு அமைச்சர்கள், அரை அமைச்சர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள், எம்.பிக்கள் ஆகியோருக்கு தெரிய வேண்டும் - என்று தெரிவித்துள்ளார் மனோ.

## பயணத்தடை...

இன்று நள்ளிரவுடன் ஒன்லைன் ஊடாக விண்ணப்பிக்கும் காலம் நிறைவடைகின்றது.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பிலான ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவே ஒன்லைன் ஊடாக விண்ணப்பிப்பதை இன்றுடன் நிறைவுக்கு கொண்டுவருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 65,000 விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்பட்டபோதிலும், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இதுவரை விண்ணப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு பயணக் கட்டுப்பாடு தளர்ப்பட்டதன் பின்னர் மேலும் சில நாட்கள் காலஅவகாசம் வழங்கப்படவுள்ளதாக பேராசிரியர் சம்பத் அமரதுங்க மேலும் தெரிவித்தார்.

## டெங்கு நோய்...

டெங்கு நிலைமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் டெங்கு பரவும் ஆபத்து அதிகமாக காணப்படுகின்றது. இம் மாவட்டங்களிலுள்ளவர்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும்.

இதேவேளை, டெங்கு மற்றும் கொரோனா நோய்கள் ஒரேமாதிரியான நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தக்கூடியவை. ஆகவே, நோய் அறிகுறிகள் தொடர்பில் மிகுந்த அவதானமாக இருக்கவேண்டும். தேவையற்ற மருந்துகளை பயன்படுத்தாமல் நோய் அறிகுறிகள் தென்படும் முதல் சந்தர்ப்பத்திலேயே வைத்தியர் ஒருவரை சந்தித்து ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, கடந்த வருடத்தைவிட இவ்வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், சீரற்ற வானிலையால் எதிர்வரும் சில வாரங்களில் நோயாளர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படக்கூடும். நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் டெங்கு நோய்க்கான சிகிச்சைப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

பயணக்கட்டுப்பாடு அமுலிலுள்ள காலப் பகுதியினுள் வீடு மற்றும் சுற்றுப்புறச் சூழலை சுத்தம் செய்வதும் மக்களின் பொறுப்பு. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தற்போது கொரோனா ஒழிப்பு நவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் தொடர்பில் முழுமையாக கவனம் செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்தப் பொறுப்புகளை மக்கள் நிறைவேற்ற வேண்டும். தமது வீட்டு சுற்றுச்சூழல் தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்க வேண்டும்- என்றார்.

## எம்.பி.மாருக்கான...

எடுக்கப்பட்டுள்ள தீர்மானம், இலங்கை அரசியலமைப்பிற்கு முரணாக காணப்படுவதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதால் வாகன இறக்குமதிக்கான நிதியை அரசாங்கத்தின் கணக்குகளுக்கு வைப்பிலிடுமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடுமாறு குறித்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை கொள்வனவுசெய்வதற்காக வெளியிடப்பட்டுள்ள கடன் தவணைக்கான ஆவணம், வரிச்சலுகை ஆகியவற்றை இலங்கை வங்கியால் வழங்கப்பட்டமை சட்ட விரோதமானதென உத்தரவிடுமாறு உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, பிரதமர் தலைமையிலான அமைச்சரவை, இலங்கை வங்கி, சுங்கப் பணிப்பாளர் நாயகம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் உள்ளிட்ட 31 பேர் இந்த மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

## மூன்று நகர சபைகளின்...

இதேநேரம், வெலிகம நகர சபைத் தவிசாளரான விஜேரத்ன ஜயவிக்ரம, நகர சபையின் உறுப்புரிமையை கைவிட்டுள்ளதாகவும் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒட்சிசன் தேவை...

இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றினால் பாதிப்புக்குள்ளாகி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மே 16ஆம் திகதி 120 ஆக காணப்பட்ட படுக்கைகள் தற்போது, 160 ஆக உயர்த்தப்பட்டுள்ளன.

அதேபோன்று, மே 16ஆம் திகதிவரையில் 90 நோயாளர்கள் காணப்பட்ட நிலையில், தற்போது, 120 இற்கும் அதிகமான நோயாளர்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவருகின்றனர். ஏனைய 40 படுக்கைகளிலும் ஏனைய நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறாயின் தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது. நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் 71 வீதத்திற்கும் அதிகமான படுக்கைகள் கொரோனா நோயாளர்களினால் நிரம்பியுள்ளன.

இதேவேளை, நாட்டில் தற்போது ஒட்சிசன் தேவை ஏற்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. அதன்படி, ஜூன் முதலாம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரையான காலப்பகுதியில் ஒட்சிசன் தேவையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. முதலாம் திகதிவரை ஒட்சிசன் தேவை ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை 400 ஆக காணப்பட்ட நிலையில், தற்போது, 800 ஆக உயர்வடைந்துள்ளது. ஆகவே, ஒட்சிசன் தேவையில் கணிசமான பங்கு அதிகரிப்பை காட்டுகின்றன. ஒட்சிசன் தேவையின் அதிகரிப்பு குறைவாக இருந்தாலும் நோயாளர்களின் எண்ணிக்கையும் பாதிப்புக்கு உள்ளாவோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது – என்றார்.

## ஆபத்தான கொரோனா...

***யோ.தர்மராஜ்***

இந்தியாவில் முதன்முதலில் கண்டறியப்பட்ட அதிக மரணத்தை ஏற்படுத்தும் உருமாறிய டெல்டா (பி.1.617.2) திரிபுடன் ஐந்து நோயாளர்கள் இலங்கையில் சமூகத்திற்குள்ளிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்புச் சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

உலகில் கொரோனா வைரஸ் திரிபடைந்து வருவதால் அந்தத் திரிபுகள் இலங்கையில் பரவுகின்றதா என்பது குறித்து தொடர்ந்து ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், கடந்த வாரத்தில் கிடைக்கப்பெற்ற மாதிரிகளைக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் திரிபுகள் பரவுவது குறித்து முன்னெடுப்படும் ஆய்வுக்காக தெமட்டகொடை, ஆராமய பகுதியிலிருந்து 9 மாதிரிகளும் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதி, கராபிட்டிய மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலிருந்தும் மாதிரிகள் பெறப்பட்டன.

அதன்படி, தெமட்டகொடை ஆராமய பகுதியில் கிடைத்த 9 மாதிரிகளில் முன்னெடுக்கப்பட்ட பயோமெட்ரிக் சோதனைகள் 5 பேருக்கு இந்தியாவின் திரிபான டெல்டா (பி.1.617.2) என்ற திரிபு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதற்கப்பால், கொழும்பு 6, கொழும்பு 8, கொழும்பு 10, கராபிட்டிய மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற மாதிரிகளிலிலுந்து பிரிட்டன் திரிபான அல்பா (பி.1.1.7) திரிபு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்தத் திரிபானது, பி.1.1.7 திரிபை விட 50 வீதம் வேகமாக பரவக்கூடியது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இது மிகவும் கடுமையானது என்பதோடு முதலாம் கட்டமாக தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் கூட இது பாதிப்பை ஏற்படுத்தும் - என்றார்.

இதேவேளை, இந்தியாவின் திரிபான டெல்டா பி.1.617.2 திரிபு தொற்றுக்குள்ளான இரண்டு நோயாளர்கள் ஏற்கனவே இலங்கையில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இந்நிலையில், தற்போது முதன்முறையாக உருமாறிய டெல்டா திரிபானது சமூகத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், தீவிர சுகாதார கட்டுப்பாடுகள் இருந்த நிலையில் இந்திய திரிபு எவ்வாறு, யார்மூலம் ஊடுருவியது என்பது குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

## எதிர்க்கட்சிகள்...

எதிர்க்கட்சியினரினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையானது சிறு பிள்ளைகளின் கடிதத்தைபோன்று, பிழையான விடயங்களைக் கொண்டதாகும். இலங்கையில் பிரதான எதிர்க்கட்சியினால் இவ்வாறானதொரு பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதா என்பதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது. நம்பிக்கைக் கொள்ளவும் முடியாது.

சிறந்த நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை எவ்வாறு கொண்டுவரவேண்டும் என எதிர்க்கட்சியினருக்கு பாடமெடுக்க வேண்டும் என்றால், நாங்கள் எதிர்க்கட்சியிலிருந்தபோது, ரணில் விக்கிரமசிங்க, ராஜித சேனாரத்ன மற்றும் ரிஷாட் பதியுதீன் ஆகியோருக்கு எதிராக நாங்கள் முன்வைத்த நம்பிக்கையில்லா பிரேரணைகளை நன்றாக வாசித்தால் நன்று.

இலங்கை நாடாளுமன்றத்தில் இதுவரை 48 அல்லது 49 நம்பிக்கையில்லா பிரேர்ணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் உரிய அமைச்சரின் குற்றங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால், எனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 10 குற்றச்சாட்டுகளிலும் நான் செய்த குற்றங்கள் எதுவும் இல்லை.

குறிப்பாக, நிதி அமைச்சின் அனுமதியுடனே எரிபொருள் விலையை அதிகரிக்க முடியும். ஆகவே, அமைச்சரவையின் அனுமதி தேவையில்லை என்பதோடு, வரலாற்றில் எப்போதும், அமைச்சரவையின் அனுமதியுடன் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதில்லை.

இவ்வாறான நிலையில், நம்பிக்கையில்லா பிரேரணையில் கையொப்பமிட்டுள்ள உறுப்பினர்கள், தங்களுக்கு இந்தச் சட்டம் குறித்து எதுவும் தெரியாது என்பதை எழுத்துமூலம் நாட்டுக்கு வெளிப்படுத்தியுள்ளனர். நான் 2020 ஆகஸ்ட் மாதத்திலேயே அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றேன். மாறாக, நம்பிக்கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று, ஜனவரி மாதத்தில் இல்லை என்பதையும் ஐக்கிய மக்கள் சக்தியினரிடம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எரிபொருள் விலையில் கிடைத்த இலாபத்தை அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பின் ஊடாக மக்களுக்கு வழங்கப்படும் என நான் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனால், உண்மையில் அவ்வாறானதொரு வாக்குறுதியை நான் மக்களுக்கு வழங்கவில்லை. அவ்வாறாயின், எனக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவது ஏன்?

எரிபொருள் விலையில் கிடைத்த வருமானத்தைக்கொண்டு எரிபொருள் கூட்டுத்தாபனத்தை கடனிலிருந்து மீட்பதாக நான் வழங்கிய வாக்குறுதியை நான் நிறைவேற்றவில்லை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனால், நான் இவ்வாறானதொரு வாக்குறுதியை நாட்டுக்கு வழங்கவில்லை. அவ்வாறு நான் வாக்குறுதி வழங்கியிருந்தால் அதன் குரல் பதிவு அல்லது வீடியோ பதிவுகளை வெளியிடுமாறு எதிர்க்கட்சிக்கு நான் சவால்விடுகின்றேன்.

ஆகவே, எனக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 10 குற்றச்சாட்டுகளும் அடிப்படையற்றவை. எனவே, நம்பிக்கையில்லா பிரேரணை என்ற பெயரில் நம்பிக்கையை உறுதிபடுத்தும் யோசனையை கொண்டுவந்ததற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நன்றி – என்றார்.

# திருச்சி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் 9 ஆவது நாளாகவும் போராட்டம்

## விடுதலையை துரிதப்படுத்துமாறு கோரி தமிழக முதலமைச்சருக்கு செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அவசர கடிதம்

(மன்னார் நகர் நிருபர்)

தமிழ்நாடு திருச்சி மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் தொடர்ந்து 9 ஆவது நாளாக நேற்று வியாழக்கிழமை (17) கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.


திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமில் சிறையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 78 ஈழத்தமிழ் அகதிகள் கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை தங்கள் விடுதலையினை வலியுறுத்தி போராட்டத்தினை ஆரம்பித்தனர். குறித்த போராட்டம் நேற்று 9ஆவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

விசாரணைக் கைதிகளாக சிறைப்படுத்தப் பட்டவர்கள் மற்றும் நீதிமன்றப் பிணையில் வந்தவர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், சிறப்பு முகாமில் காலவரையறையின்றி எந்த விதமான நீதிமன்ற நடவடிக்கையுமின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் குடும்பங்களுடன் இருந்து வழக்கினை தொடர உதவுமாறு தமிழக அரசிடம் கோரிக்கை முன்வைத்து காத்திருப்பு போராட்டத்தினை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். இதன்போது தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமது விடுதலை குறித்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்ட ஈழத்தமிழர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, அண்மையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். குறித்த கடிதத்தில் தமிழக முகாம்களில் வாழும் ஈழத்தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொள்ளுமாறும், திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் தங்களது விடுதலை தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஈழத்தமிழர்களின் விடுதலையை துரிதப்படுத்தக் கோரியும் குறித்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கொரிய மொழித்தேர்ச்சி பரீட்சைக்கு தோற்றிய 5 ஆயிரம் இளைஞர்களுக்கு அநீதி

## அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டுமென எதிர்க்கட்சி வலியுறுத்து



நாட்டில் கடந்த 2018ஆம் ஆண்டு கொரிய மொழித்தேர்ச்சி பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்து கொரியாவுக்கு, தொழில் வாய்ப்புக்காகச் செல்லவிருந்த சுமார் 5 ஆயிரம் இளைஞர்கள் அரசாங்கத்தின் கவனயீனம் மற்றும் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் தற்பொழுது ஆதரவற்ற நிலையில் உள்ளதாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, சுமார் ஆயிரத்து 600 பேர் சேவை உடன்படிக்கை அடிப்படையிலும், 2 ஆயிரத்து 500 பேர் காத்திருக்கும் பட்டியலிலும் உள்ளதுடன், தற்பொழுது அவர்கள் இரண்டாண்டு தொழில் விரிவாக்கக் காலப்பகுதியையும் நிறைவு செய்தவர்களாக உள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா பெருந்தொற்றை காரணம் காட்டி எந்தவொரு அடிப்படையும் இல்லாது அரசாங்கம் இந்த இளைஞர்களின் வாழ்வுடன் விளையாடுவதுடன், ஏற்கனவே தாய்லாந்து, சீனா, லாவோஸ், வியட்நாம் போன்ற நாடுகள் அவர்களது தொழிலாளர்களைக் கொரியாவுக்கு அனுப்பியுள்ளது.

ஆகவே, எமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இந்த பாரிய பிரச்சினை பற்றி அரசாங்கம் எந்தவித தேவைப்பாடோ அல்லது ஊக்கமோ இல்லாது காணப்படுகின்றது. இதில் காணப்படும் பிரச்சினை யாதெனில், எமது நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய கொரியா நாட்டு தொழில் வாய்ப்புகள் வேறு நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. இதன்மூலம் இந்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய வெளிநாட்டுச் செலாவணி வேண்டுமென்றே இல்லாமல் போய்விடுகிறது. ஏற்கனவே அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள சுமார் 5 ஆயிரம் இளைஞர்கள் கொரியாவுக்குச் செல்லத் தேவையான நடவடிக்கைகள் எடுக்காததால் குறித்த இளைஞர்களுக்கு பாரிய அநீதி ஏற்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் பல இலட்சம் ரூபா செலவு செய்து இந்த இளைஞர்கள் கொரிய நாட்டு தொழில் வாய்ப்புக்காக மூன்று வருடங்களாகக் காத்திருந்து பாரிய அழுத்தங்களுடன் உள்ளனர். அரசாங்கத்துக்கு மிக இலகுவாகத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டு தனிமைப்படுத்தல் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயற்பட்டுக் குறித்த இளைஞர்களை தொழில் வாய்ப்புக்காகக் கொரியாவுக்கு அனுப்பி வைக்க முடியும்.

ஆனாலும், நாட்டைப் பற்றியோ அல்லது இளைஞர் சமூகத்தின் வாழ்க்கையைப் பற்றியோ கொஞ்சம் கூட கவனத்தில் கொள்ளாது அரசாங்கம் இந்த இலகு செயற்பாட்டையாவது செய்வதாக இல்லை. துரிதமாக இந்த இளைஞர்களுக்கு நியாயமான தீர்வொன்றை வழங்குமாறு நாங்கள் அரசாங்கத்தை மீண்டும் வலியுறுத்துகின்றோம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஊவாதீப கல்விசார் பத்திரிகை உத்தியோகபூர்வமாக அறிமுகம்

கொவிட் தொற்று காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலை கற்பித்தல் நடவடிக்கைகளைச் சீரமைக்கும் நோக்கில் ஊவா மாகாண கல்வி அமைச்சு, ஊவா மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் மாகாண ஊடகப் பிரிவு என்பன இணைந்து வெளியிட்டுள்ள கல்விசார் பத்திரிகை நேற்று (17) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலினால் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆளுநரின் ஆலோசனைக்கு அமைய 'ஊவாதீப கல்விசார் பத்திரிகை' என்ற பெயரில் வெளியாகியுள்ள இந்த பத்திரிகையில் உயர்தரம், சாதாரணதரம் மற்றும் புலமைப்பரிசில் மாணவர்களின் அனைத்து பாடங்களுக்குமான பாடத்திட்டங்கள் உள்ளடக்கியதாகத் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது.

குறித்த பத்திரிகைகள் ஊவா மாகாண வலயக் கல்வி காரியாலயங்களினால், பாடசாலை அதிபர்களின் ஊடாக அனைத்து மாணவர்களினதும் வீடுகளுக்கும் இலவசமாக விநியோகிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அபன்வெல, கல்விப் பணிப்பாளர் டீ.எம்.ரத்நாயக உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



# தாழ்வுபாடு கடற்கரையில் கரையொதுங்கிய கடலாமைகள்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு கடற்கரைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை (17) காலை இரண்டு கடலாமைகள் பாரிய காயங்களுடன் கரையொதுங்கியுள்ளன.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய கப்பலிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தானவை என சந்தேகிக்கப்படும் சில பொருட்கள் மன்னார் கடற்கரை பகுதிகளில் கரையொதுங்கியுள்ளன.

இந்த நிலையில் கடுமையான காயங்களுடன் நேற்று வியாழக்கிழமை காலை 2 கடலாமைகள் தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் கரையொதுங்கியுள்ளன.

அவற்றில் ஒரு கடலாமை உயிரிழந்துள்ளதோடு, மற்றைய கடலாமை உயிருடன் இருந்தது. கடற்படையினர் குறித்த கடலாமைகள் கரையொதுங்கியமை தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். எனினும், நீண்ட நேரமாகியும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த பகுதிக்கு வராதநிலை காணப்பட்டதோடு, உயிருக்குப் போராடும் கடும் காயங்களுடன் கரையொதுங்கிய மற்றைய கடலாமையை மீட்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரியவருகின்றது.

இச்செய்தி எழுதும் வரை குறித்த பகுதிக்கு அதிகாரிகள் யாரும் செல்லவில்லை. அண்மையில் வங்காலை மற்றும் சிலாபத்துறை கடற்கரை பகுதிகளிலும் கடலாமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

# கோப் குழுவின் விசேட கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி!

## பேராசிரியர் சரித ஹேரத் தீர்மானம்



அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) விசேட கூட்டத்தை எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடத்துவதற்கு அதன் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தீர்மானித்துள்ளார்.

குழு உறுப்பினர்களுக்காக நடத்தப்படும் இந்தக் கூட்டத்தில் கோப் குழுவினால் 09ஆவது நாடாளுமன்றத்தில் இதுவரை சமர்ப்பிக்கப்பட்டுள்ள 02 அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பாய்வு செய்யப் படவுள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் கோப் குழு முன்னிலையில் அழைக்கப் படவேண்டிய நிறுவனங்கள் யாவை என்பது குறித்தும் இக்கூட்டத்தில் தீர்மானிக்க எதிர்பார்த்திருப்பதாக அக்குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

கொவிட்-19 சவாலுக்கு மத்தியில் கோப் குழுவின் கூட்டங்களை ஒன்லைன் முறைமையில் (online) ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னெடுப்பது குறித்தும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

இதற்கமைய சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கணக்காளர் ஆகியோருடன் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரை மாத்திரம் குழுவின் முன்னிலையில் அழைப்பது மற்றும் ஏனையவர்களை ஒன்லைன் முறைமையின் கீழ் இணைத்துக் கொள்வது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்படவுள்ளது.







**மேலதிக 8 மணிநேரத்திற்கு 1/30 சம்பளத்தை அரசாங்கம் வழங்க வேண்டும், 180 நாட்கள் நிறைவு செய்த அனைத்து ஊழியர்களின் சேவையை உறுதிபடுத்த வேண்டும் உள்ளிட்ட பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு தேசிய வைத்தியசாலை தாதியர்கள் நேற்று (17) வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)**

# பியகம சுகாதாரப் பிரிவில் நேற்று முன்தினம் மாத்திரம் 97 கொரோனா நோயாளர்கள்

(ஹனபி எம்.தாஸீம்)

பியகம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று முன்தினம் (16) மாத்திரம் 97 கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக பியகம சுகாதார வைத்திய அதிகாரி பிரசன்ன விஜயவர்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இவர்களுடன் தொடர்பை பேணிய 183 பேர் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். அதற்கிணங்க கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரை பியகம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 558 ஆக உயர்ந்துள்ளதுடன் தொற்றுக்குள்ளானவர்களோடு பழகியவர்கள் 2980 பேர் சுய தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருந்தனர்.

மேலும், இதுவரை இப்பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான 27 பேர் உயிரிழந்துள்ளனர். பியகம சுகாதார வைத்திய அதிகாரியோடு இணைந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இப்பிரதேசத்தில் கொரோனா சம்பந்தப்பட்ட விடயங்களை கண்காணித்துவருகின்றனர் என்றார்.

# வேலைவாய்ப்புக்காக கொரியா செல்லும் வசதிகள் விரைவில் வழங்கப்படும்

## வெளிநாட்டமைச்சரிடம் அந்நாட்டுத் தூதுவர் உறுதி



கொரியாவில் தொழில் புரிவதற்குத் தகைமையுடைய இலங்கை இளைஞர்கள் கொரியாவிற்கு பிரயாணிப்பதற்கான வசதிகள் விரைவில் வழங்கப்படுமென இலங்கைக்கான கொரியத் தூதுவர் வூன்ஜின் ஜியோங் வெளிநாட்டமைச்சரிடம் உறுதியளித்தார்.

கொரியாவில் தொழில் புரிவதற்குத் தகைமையுடைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் தாமதங்கள் குறித்து வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் வெளிநாட்டமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரியாவில் தொழில் புரிவதற்குத் தகைமையுடையவர்கள் நீண்ட காலமாக கொரியாவிற்கு தொழில் நிமித்தம் செல்வதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற போதிலும், கொவிட் தொற்றுநோயின் காரணமாக அது நாளுக்கு நாள் தவிர்க்கப்படுகின்றது என வெளிநாட்டமைச்சர் சுட்டிக் காட்டினார். இதன் காரணமாக அவர்கள் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

கொரிய அரசாங்கத்தின் நிலைப் பாட்டை விளக்கிய இலங்கைக்கான கொரியத் தூதுவர், கொரியாவில் தொழில் புரிவதற்குத் தகைமையுடைய அனைவருக்கும் கொரியாவில் தொழில் வாய்ப்புக் களை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார். கோவிட் தொற்றுநோயின் காரணமாக அந்த வாய்ப்புக்களை வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது, எனினும், அவர்கள் விரைவில் கொரியாவுக்கு பயணிப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையின் விவசாயத்துறையின் அபிவிருத்திக்கு உதவுவதற்கு கொரிய அரசாங்கம் திட்டமிட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இலங்கை இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை கொரியாவில் அதிகரித்தல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துதல் ஆகியன உள்ளடங் கலாக பல விடயங்கள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கான இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன, அமைச்சின் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்த, அதன் பிரதித் தலைவர் நிமல் திப்பட்டுமுனுவ மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் கொரோனா தொற்று பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் உலகளாவிய பாதிப்பு அடிப்படை யில் 75ஆவது இடத்துக்கு இலங்கை முன்னேறியுள்ளது.

இலங்கையில் கொரோனா 3ஆவது அலையாக புதுவருடக் கொத்தணி தீவிரம் பெற்றுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் மேலும் 1631 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து இலங்கையில் இதுவரை தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 2,30,692 ஆக அதிகரித்துள்ளது.

இதனடிப்படையில் உலகளாவிய ரீதியில் கொரோனா பாதித்த நாடுகள் வரிசையில் 75ஆவது இடத்துக்கு இலங்கை முன்னேறியுள்ளது.

2,40,708 மொத்த தொற்றாளர்களுடன் ஓமான் 74ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில், 3 கோடியே 43 இலட்சத்து 52 ஆயிரத்து 329 தொற்றாளர்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

2 கோடியே 96 இலட்சத்து 33 ஆயிரத்து 105 தொற்றாளர்களுடன் இந்தியா 2ஆவது இடத்திலும், ஒரு கோடியே 75 இலட்சத்து 43 ஆயிரத்து 853 தொற்றாளர்களுடன் பிரேஸில் 3ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் அடுத்த இரண்டு மூன்று வாரங்களில் கொரோனா வைரஸ் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். அடுத்த சில வாரங்களில் பெருமளவு உயிரிழப்புகள் ஏற்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும், கொரோனா வைரஸினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

பி117 கொரோனா வைரஸிலிருந்தே மூன்றாவது அலை ஆரம்பமானது என தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், இது வேகமாக பரவக்கூடியது. இதனால் பல பாதிப்புகளும் உயிரிழப்புகளும் ஏற்பட்டன என குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸினால் ஒருவர் பாதிக்கப்பட்டு இரண்டு மூன்று வாரங்களின் பின்னரே உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. அதிகமான உயிரிழப்புகள் இரண்டு மூன்று வாரங்களின் பின்னரே இடம்பெற்றுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் எந்தச் சூழ்நிலையிலும் எந்தத் தருணத்திலும் மாற்றமடையலாம் என தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், பி117 கொரோனா வைரஸுக்கு எதிராக மருந்துகள் பயனளிக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார். வைரஸை தற்போது கட்டுப்படுத்தத் தவறினால் எதிர்காலத்தில்

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூன் 18ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# எரிகிற வீட்டில் பிடுங்கும்வரை இலாபம்!

மேலும் பல வைரஸ்கள் உருவாகலாம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறித்து கவனிக்க வேண்டியுள்ளது.

அதேசமயம் பொதுமக்கள் தொடர்ந்தும் வேண்டுமென்றே போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மீறினால் மேலும் இரண்டு வாரங்களுக்கு போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸின் மூன்றாவது அலையை கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை பொதுமக்கள் வேண்டுமென்றே மீறினால் மேலும் இரண்டு வாரங்களுக்கு இறுக்கமாக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாட்டை நீடிப்பதை தவிர, சுகாதார அதிகாரி களுக்கு வேறு மாற்றுவழிகள் இல்லை என ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களுடன் ஒப்பிடும்போது புதிய வைரஸ் பரவல் பெருமளவுக்கு குறைவடைந்துள்ளது என தெரிவித்துள்ள அவர், பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுவதும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை பின்பற்றுவதும் அவசியம் என தெரிவித்துள்ளார்.

நிலைமை இப்படி தீவிரமாக இருக்கையில், எரிகிற வீட்டில் பிடுங்கும் அளவுக்கு இலாபம் என்றவாறு கொரோனாவை வைத்து ஒருபக்கம் வியாபாரமே நடக்கிறது. முன்னர் முகக்கவசங்கள் விற்பனையில் மாபியா கும்பல்கள் இருந்தமைபோன்று இப்போது தடுப்பூசி வழங்கலிலும் எதேச்சதிகாரம் நடப்பதாக தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

சீன தடுப்பூசிகளான சினோபார்ம் 30 தடுப்பூசிகளை ஹபராதுவ மருத்துவ அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த வாகனச்சாரதி ஒருவரும் ஊழியர் ஒருவரும் திருடியுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சீன தடுப்பூசி திருடப்பட்டமை குறித்து விசேட பொலிஸ் குழுவொன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என அஜித் ரோகண தெரிவித்துள்ளார். தடுப்பூசி திருடப்பட்டமை குறித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். 90,000 ரூபா பெறுமதியான மருந்துகளே திருடப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

ஒழுங்கான திட்டமிட்ட கட்டமைப்போ அல்லது ஏற்பாடுகளோ இருந்தால் தடுப்பூசிகள் எப்படி திருடப்படும் ? அரசிடம் இவற்றுக்கு ஒழுங்கான பொறிமுறை ஒன்று இல்லையென்பது பட்டவர்த்தனமாக வெளிவந்த இன்னுமொரு உதாரணம் இது. உலகமும், உள்நாடும் கொரோனா தீநுண்மியால் அல்லல்பட்டுக்கொண்டிருக்கும்போது அவற்றை யெல்லாம் மறந்து செயற்படும் நிலைமையே இங்கு இருக்கிறது.

தடுப்பூசிகளை எப்படி வெளியில் விற்க முடியும்? தடுப்பூசிகள் சில மாவட்டங்களுக்கு மட்டும் விசேடமாக சென்றிருப்பது அதிகார துஷ்பிரயோகமில்லையா? அவசர தேவைப்பாடு உள்ளோருக்கு இன்னமும் தடுப்பூசி வழங்கப்படாமை ஏன் ? ஒருசிலர் தமது பிரதேசங்களை விட்டு இன்னுமொரு பிரதேசத்திற்கு சென்று தடுப்பூசி போடுவது எப்படி? இப்படி பதில்கள் இல்லாத கேள்விகள் பல தினமும் எழுந்துகொண்டிருக்கின்றன.

தடுப்பூசிகள் போடுவதன்மூலம் கொரோனா உயிரிழப்புகளை தவிர்க்கலாம் என்று கூறும் அரசு, தடுப்பூசிகள் கிரமமாக மக்களை சென்றடைவதை உறுதிசெய்யவேண்டும். சாராயம் கள்ளச்சந்தையில் விற்கப்படுவதுபோல், தடுப்பூசிகளும் பின்கதவால் வெளியே செல்லும் நாட்டில், எமது விதியை நினைத்து நாம் நொந்துகொள்வதைவிட வேறென்ன செய்யமுடியும்?



# அடிக்கடி கால் வலி ஏற்படுவது எதனால்?

ஆணோ, பெண்ணோ கால் வலி பற்றி கூறாதவர்கள் அரிது. பல பாதிப்புகள் முதலில் பாதத்தில்தான் தெரியும். ஆகவே, காலையும், பாதத்தையும் பத்திரமாய் காப்போம். கால் பாதங்களை அதிகம் பயன்படுத்துவதால் ஏற்படும் தேய்வு, எலும்பு, தசை, தசைநாரில் ஏற்படும் காயங்கள், சுளுக்கு, இரத்தக்கட்டி, குறைவான இரத்தோட்டம், சுருள் சிரை நரம்பு என பல காரணங்களால் கால் வலி உண்டாகின்றது.

### தசை வலி ஏன் உண்டாகின்றது?

அடிபடுதல், வீக்கம், சருமம், தசை, எலும்பு, மூட்டு ஆகிய கீழ் கால் பகுதிகளில் காயம் ஏற்படுதல் காரணமாக உள் இரத்தக் குழாய்களில் பாதிப்பு ஏற்படுதல், அதிக கால் உழைப்பு, கிருமி பாதிப்பு ஆகியவற்றினால் ஏற்படுகின்றது.

### அடிக்கடி ஏன் கால் வலி என்கிறோம்?

காலின் ஆழ்ந்த இரத்தக் குழாயில் உணர்வு ஏற்பட்டிருக்கலாம். நீண்டகாலம் படுக்கவேண்டிய உடல் பாதிப்பு ஏற்படும்போது, கால்களுக்கு பயிற்சி இல்லை என்றால் இவ்வாறு ஏற்படலாம். வீக்கம், பிடிப்பு, வலி ஏற்படலாம். மூட்டு வலி, மூட்டு தேய்மானம் அதிகமாகக் காணப்படும் ஒன்று. எலும்பிலோ, சதையிலோ கிருமி பாதிப்பு ஏற்பட்டு வீக்கம், சிவந்து போதல், வலி ஆகியவை ஏற்படலாம்.

நரம்பு பாதிப்பினால் வலி, மரத்து போகுதல், குறு குறுத்தல் ஏற்படலாம். திடீரென கனமான ஒன்றினை தூக்குவது, கோணலாய் திரும்புவது. அதிக உழைப்பு போன்றவை சதைகளுக்கு அதிக சோர்வை ஏற்படுத்தலாம். இவை கீழ் முதுகு, கழுத்து, தோள்பட்டை, தொடையின் பின்புறம் இவற்றில் பொதுவாக ஏற்படும். பாதிப்புள்ள பகுதியில் மட்டுமே வலி இருக்கும். இதற்கு ஐஸ் ஒத்தடம், சுடு ஒத்தடம், வலி நிவாரண மாத்திரைகள் போதும். வலி கூடுதலாக இருப்பின் மருத்துவ உதவி தேவை.

### ஏன் ஏற்படுகின்றது?

உடற்பயிற்சிக்குமுன் முறையாக உடலை தயார்படுத்தாது இருத்தல். முறையான உடல் உழைப்பு இன்மை. அதிக உழைப்பு, கால் தடுப்பது, ஓடுவது, குதிப்பது, அதிக கனத்தினை தூக்குவது இவைகள் திடீரென தசை பாதிப்பினை ஏற்படுத்தும்.

இந்த சதை வலிக்கு முதல் நிவாரணம் ஓய்வுதான். பாதிக்கப்பட்ட பகுதிக்கு ஓய்வு வேண்டும். பாதிக்கப்பட்ட இடத்தில் ஐஸ் ஒத்தடம் கொடுங்கள். சுமார் 20 நிமிடங்கள் கொடுங்கள். முதல் நாளன்று 4/5 முறை இவ்வாறு செய்யலாம். அடுத்த நாள்முதல் 4 மணிநேரம் அல்லது 6 மணி நேரத்திற்கு ஒருமுறை ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

கால், கைகளில் அடிபட்டிருந்தால் தலையணை கொண்டு கால், கையை உயர்த்தி வைக்கலாம். மூன்று நாட்களுக்குப் பிறகு அடிபட்ட இடத்தில் சுடு ஒத்தடம் கொடுத்தல்.

அதிக ஓய்வும் தவறு. வலி நீங்கு நிவாரணம் பெற்றவுடன் பயிற்சிக்கு முன், பயிற்சி செய்யவேண்டும்.

எடுத்தவுடனே நாம் பயிற்சி செய்வது உறுப்புகளை பாதிப்படையச் செய்யும். வலி மிக அதிகமாக இருந்தாலோ, பாதிக்கப்பட்ட இடம் மாறி போயிருந்தாலோ, அசைவுகள் கடினமாக இருந்தாலோ உடனடி மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்.

### இத்தகைய பாதிப்புகளை தவிர்ப்பது எப்படி?

ஒரேநிலையில் அதிகநேரம் உட்கார்ந்து இருக்கக்கூடாது.



அடிக்கடி எழுந்து நடக்கவும், முறையான ஒழுங்கான முறையில் அமரவும் பழக வேண்டும்.

அதிக உடல எடையுடையவராய் இருப்பின், உடல் எடையை குறைப்பது நல்லது. முறையான அளவுடைய பாதணிகளை அணிவதோடு, உடற்பயிற்சியினை பயிற்சியாளரிடம் கற்று பின் பழகவேண்டும்.

இதேபோன்று கணுக்கால்சுளுக்கும் மிக சாதாரணமாக காணப்படக்கூடிய ஒன்றே. உடல் எடையினை கணுக்கால் தாங்குகின்றது என்பதால் மேற்கூறிய சிகிச்சை முறைகள் அனைத்தும் இதற்கு பொருந்தும் என்றாலும் கூடுதல் கவனம் தேவை.

### தசைகளில் வலி:

சிலர் எப்பொழுதும் உடலில் வலியினை சொல்லிக்கொண்டே இருப்பார்கள். தையல் வேலை செய்பவர்கள், சுமை தூக்குபவர்கள் என்ற வகையில், மிக அதிகமான உழைப்பை கொடுக்கும்போது தசை சோர்ந்து வலியும் ஏற்படுகிறது.

- **ப்ளு காய்ச்சல்**
- **கிருமி தாக்குதல்**
- **தைரொய்ட் குறைபாடு**
- **சிலவகை மருந்துகள்**
- **பொட்டாசியம் குறைபாடு** ஆகியவையும் பாதிப்பினைத் தரலாம்.

வலி குறையாது நீடித்தாலோ, காரணமின்றி வலி ஏற்பட்டாலோ காய்ச்சலுடன் கூடிய வலியாக இருந்தாலோ வலியோடு சிறுநீர் செல்வதில் கடினம் இருந்தாலோ, வலியோடு விழுங்குவதில் கடினம் இருந்தாலோ, வாந்தி, காய்ச்சல், கழுத்து இறுக்கம், அசைவில் கடினம் ஆகியவை இருந்தாலோ உடனடி மருத்துவரை அணுகவும். இதுபோன்ற மேலும் சில மருத்துவ காரணங்களும் உள்ளன. ஆர்த்தரைட்டிஸ் எனப்படும் மூட்டுகளின் வலி 100இற்கும் மேற்பட்ட பிரிவுபடும்.

இவைகளை மருத்துவ ஆலோசனைப்படி மட்டுமே சிகிச்சை அளிக்க முடியும்.

இரவில் பலர் அதிகமான கால் வலி, காலில் ஒருவித சங்கடம் இவற்றினை உணர்வார்கள். ஓய்வின்போதே இவ்வலி அதிகம் தெரியும். இத்தொந்தரவினால் தூக்கம் அதிகம் கெடும். இதற்கான மருத்துவ சிகிச்சையை மருத்துவர் மூலம் பெறலாம். மேலும்,

- **புகை பிடித்தலை நிறுத்துதல்**
- **எடை குறைத்தல்**
- **கோப்பி, தேநீர் அளவைக் குறைத்தல்**
- **நடைப்பயிற்சி**
- **இரும்பு சத்து குறைபாடு** இருப்பின் சரிசெய்தல் ஆகியவை மூலமாகவும், இரவு ஏற்படும் கால் வலியினை குறைத்துக்கொள்ள முடியும்.

மேலும், சினைப்பை புற்றுநோயும் அடிவயிறு வலி, கால் வலி இவற்றினை கொடுக்கும் என்பதனை அறிந்துகொள்ள வேண்டும்.

பலருக்கு முறையற்ற காலணிகள்தான் கால் வலியினை உருவாக்குவதாக பல ஆய்வுகள் கூறுகின்றன. பாதத்தில் மட்டும் 133 மூட்டுகள் உள்ளன. இவை மூட்டு வலியினை உருவாக்க முடியும் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.

நீரிழிவு நோய் பல பாதிப்புகளை பாதத்தில் ஏற்படுத்துகின்றது. காலில் ஏற்படும் எலும்பு வலி, எலும்பு வலியின் காரணம் எலும்பின் புற்றுநோய், இரத்தச்சோகை, கிருமி, அடிபடுதல், எலும்பு தேய்மானம், எலும்பு கரைதல் போன்ற காரணங்களால் இருக்கக்கூடும்.

நீர் கோர்த்த கால் வீக்கத்திற்கு ஹோர்மோன் சிகிச்சை, ஆழ்ந்த உள்காயம், இருதய பாதிப்பு, சிலவகை மருந்துகள், சிறுநீரக பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு, கர்ப்பம், உயர் இரத்த அழுத்தம் ஆகியவைகள் காரணமாக இருக்கலாம்.

குமாடாய்ட் ஆர்த்ரைடின் பிரிவு மூட்டு வலி, கால் விரல்களில் ஒருவித இறுக்கம், மூட்டுகளில் வீக்கம், சோர்வு இவற்றை அளிக்கலாம். இதனை ஆரம்ப நிலையிலேயே கவனித்து சிகிச்சை, பயிற்சி முறைகளை பெறுவது அவசியம்.

சிலருக்கு தூங்கி எழுந்தவுடன் குதிகால் வலி அதிகமாக இருக்கும். கொஞ்சம் நடந்த பிறகே வலி குறையும். இதற்கு சில மருத்துவ பரிசோதனைகள், மருந்துகள் சில பயிற்சிகள் நல்ல நிவாரணம் ஆகும்.

சிலருக்கு பாதத்தில் அதிக அரிப்பு இருக்கும். இதற்கான காரணங்கள் :

- **நரம்பு பாதிப்பு**
- **சோரியாஸிஸ் எனும் சரும பாதிப்பு**
- **பூச்சிகள்**
- **உடலில் உப்பு அதிகம்** போன்ற மேலும் பல காரணங்கள் உள்ளன. முறையான பாத பராமரிப்பு, சுகாதாரம் இவை மிகவும் அவசியம். அரிப்பிற்கு பல மருத்துவ காரணங்கள் இருக்கக்கூடும் என்பதால் இதனை அலட்சியம் செய்யாமல் மருத்துவ உதவி பெறுதல் அவசியம்.
- **இரவில் சிலருக்கு பாதத்தில் அரிப்பு இருக்கும்.**
- **பூஞ்சை பாதிப்பு, எக்ஸிமா பாதிப்பு இருக்கலாம்.**
- **காலுறைகளை அன்றாடம் மாற்றம் செய்வது அவசியம்.**
- **வெறும் காலுடன் தூய்மையற்ற இடங்களில் நடப்பது** பல நோய்களை கொண்டுவந்துவிடும். இதனால் கூட இரவில் அரிப்பு ஏற்படலாம்.

பாதத்தில் மட்டும் 26 எலும்புகள், 133 மூட்டுகள், 107 தசைநார்கள், 19 தசைகள் உள்ளன. காலை வைத்துதான் வாழ்நாளில் சுமார் 1,15,000 மைல்கள் நடக்கின்றோம். பல பாதிப்புகள் முதலில் பாதத்தில்தான் தெரியும். ஆகவே, காலினையும், பாதத்தினையும் பத்திரமாய் காப்போம்.

# சொத்தை பல் பிரச்சினையா?




முன்னைய காலத்தில் வேப்பங்குச்சியை கொண்டு பல் துலக்கினார்கள். அதனால் பற்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எதுவும் எளிதில் வராது. ஆனால், இன்றைய நிலையில் குழந்தைகள்முதல் பெரியவர்கள்வரை அனைவரிடமும் இந்த பற்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை உள்ளது. பற்களில் ஏற்படும் பிரச்சினை வீக்கம், வலி, கூச்சம், சொத்தை இரத்தக் கசிவு இவைகளை அலட்சியப்படுத்தாமல் உடனடி சிகிச்சை மேற்கொள்வதுதான் சாலச்சிறந்தது.

பற்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் மிக முக்கியமானது பல் சொத்தை. இது சிறியதாக ஆரம்பித்தாலும் முடிவில் பெரும் விளைவை ஏற்படுத்திவிடுகிறது. பற்களில் சொத்தை ஏற்படும்போது கடுகின் அளவை விட சிறியதாக தெரியும், ஆனால், அது கடைசியில் பற்களை மெது மெதுவாக அரித்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது.

எந்தவொரு இனிப்பு பொருளும் சாப்பிட்ட பிறகு நன்றாக வாயை கொப்பளிக்க வேண்டும். இதை முறையாக செய்துவந்தால் பல்சொத்தை வராமல் தடுக்கலாம். பல்சொத்தையை ஆரம்பகட்டத்திலேயே சரிசெய்ய நம் வீட்டிலுள்ள பொருட்களை வைத்தே எளிய முறையில் வைத்தியம் பார்க்கலாம்.

### பல்சொத்தையை சரிசெய்ய வீட்டு வைத்தியம்

#### 01. நல்லெண்ணெய்

காலையில் தினமும் 10 மில்லி நல்லெண்ணெய் கொண்டு நன்றாக வாயை கொப்பளிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் வாயிலுள்ள பக்டீரியாக்கள் அழிந்து வாய் மற்றும் பற்களை ஆரோக்கியமாக வைக்கிறது.

#### 02. உப்பு

தினமும் காலையில் பல் துலக்குவதற்கு முன் வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு உப்பு சேர்த்து கொப்பளித்து வர, பல் சொத்தையை தடுக்கலாம். காலையில் இந்த முறையை செய்ய முடியவில்லை என்றால் தினமும் மூன்று வேளை சாப்பிடுவதற்கு முன்பும் செய்யலாம்.

#### 03. பூண்டு

மூன்று பல் பூண்டை நன்கு இடித்து உப்பில் தேய்த்தெடுத்து சொத்தை பல்லின் மேல் 10 நிமிடம் வைத்திருக்க வேண்டும். இப்படி செய்து வந்தால் சொத்தை பல்லிலுள்ள பூச்சிகள் அழிக்கப்பட்டு பக்டீரியாக்கள் நீங்கி நாளடைவில் சொத்தை பல் சரியாகிவிடும்.

ஒரு பல் பூண்டை கல் உப்புடன் சேர்த்து, பூச்சிகள் உள்ள பற்களில் வைக்கவும். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அதனை நன்கு மென்று விழுங்கவும். இப்படி தொடர்ந்து செய்துவந்தால் பற்களிலுள்ள சொத்தை சிறிது சிறிதாக குறைந்துவிடும்.

#### 04. மஞ்சள் தூள்

சொத்தை பற்களின் மேல் மஞ்சள் தூளை 5 நிமிடம் நன்கு தேய்த்து பின் வெதுவெதுப்பான நீரில் கொப்பளித்து வந்தால் நாளடைவில் சொத்தை பல் பிரச்சினை நீங்கிவிடும்.

#### 05. பெருங்காயம்

பெருங்காயத்தை தூளாக்கி அதை நீரில் கொதிக்க வைத்து பின் அதனை மிதமான சூட்டில் அல்லது ஆறிய பிறகு நன்கு கொப்பளிக்க வேண்டும். உங்கள் பற்கள் சிதைவடைந்திருந்தாலோ அல்லது பற்களில் அதிக பூச்சி இருந்தாலோ பெருங்காயத்தை பற்களின் மேல் வைக்கவும். இவ்வாறு செய்தால் பற்களிலுள்ள பூச்சிகளை அழித்து வெளியேற்ற உதவுகிறது.

#### 06. சாதிக்காய் எண்ணெய்

சாதிக்காய் எண்ணெய் பல் சொத்தைக்கு மிகச் சிறந்தது. சிறிய பஞ்சை இந்த எண்ணெயில் நனைத்து வலி எடுக்கும் பற்களின் மேல் வைக்கவும். பின் 5 நிமிடத்தில் இந்த எண்ணெய் பற்களிலுள்ள பூச்சிகளை அழித்து விடுகிறது. பின் மிதமான தண்ணீரில் வாயை கொப்பளிக்க பற்களிலுள்ள பூச்சிகள் வெளியேறும் மற்றும் பல் வலி குறைந்துவிடும்.

# கடன்களை மீளப்பெறும்போது மக்கள் பிரச்சினைகளை கவனத்திற்கொள்ளவும்

## மத்திய வங்கி அதிகாரிகளுக்கு பிரதமர் ஆலோசனை



கொரோனா தொற்று நிலைமைக்கு மத்தியில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ள மக்களின் கடன்களை மீளப்பெறும்போது அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நிதி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மத்திய வங்கி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து மத்திய வங்கி அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவது தொடர்பில் இதன்போது மத்திய வங்கி பிரதிநிதிகள் பிரதமருக்கு விளக்கமளித்தனர்.

இவ்வாறான தொற்று நிலைமைக்கு மத்தியில் நிதிக் கடன்களை பெற்றுக்கொண்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விசேட கவனம் செலுத்தினார்.

எனவே, கடன்களை மீளப்பெறும்போது கடன்களை பெற்றுக்கொண்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை பின்பற்றுமாறு பிரதமர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தவணை கட்டணங்களை செலுத்தும்போது வட்டித் தொகையை முதலில் செலுத்த வேண்டியிருப்பதால் கடனை திரும்பச் செலுத்த முடியாத நிலைக்கு கடனாளிகள் தள்ளப்பட்டுள்ளதுடன், வட்டி மற்றும் கடன்தொகையை செலுத்துவதற்கான முறையில் மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பிலும் இதன்போது பிரதமர் கவனம் செலுத்தினார்.

குறித்த சந்திப்பில் நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டீ.லக்ஷ்மன், மத்திய வங்கியின் துணை ஆளுநர்களான கே.எம்.எம்.சிறிவர்தன, எம்.டபிள்யூ.ஜீ.ஆர்.டீ.நாணயக்கார, மத்திய வங்கியின் உதவி ஆளுநர்களான ஜே.பீ.ஆர். கருணாரத்ன, ஏ.ஏ.எம். தாஸீம், பொருளாதார மற்றும் ஆராய்ச்சி பணிப்பாளர் சீ.அமரசேகர, வங்கி அல்லாத நிதி நிறுவன ஆராய்ச்சி பணிப்பாளர் சமன் நாணயக்கார உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## புத்தளம் கடற்பரப்பில் கரையொதுங்கிய தென்னிந்தியாவுக்கு சொந்தமான இரு மீன்பிடிப் படகுகள்



(ஜூட் சமந்த)

தென்னிந்திய மீனவர்களை பயன்படுத்தும் இரண்டு மீன்பிடிப் படகுகள் புத்தளம் கடற்கரை பிரதேசத்தில் கரையொதுங்கியிருந்த நிலையில், அந்தப் பிரதேச மீனவர்களினால் இவ்விரு படகுகளும் உடப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

30 அடி நீளமான இவ்விரு படகுகளும் ஆறு அடி உயரமானவை என மீனவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

நீண்டநாட்களாக இந்தப் படகுகள் கடலில் இருந்திருக்கலாமென நம்புவதாக அந்தப் பிரதேச மீனவர்கள் தெரிவிக்கிறார்கள்.

## மரக்கலகம கிராமம் மீள் அறிவித்தல்வரை முடக்கம்

மாதம்பே, பழைய நகரத்திலுள்ள மரக்கலகம கிராமம் மீள் அறிவித்தல்வரை உள்நுழைதல் மற்றும் வெளியேறுவதற்கு சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களில் மரக்கலகம கிராமத்தில் கொரோனா நோயாளர்கள் 68 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இருவர் உயிரிழந்துள்ளனர். அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்கள் மதுரன்குளி கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.



## மஞ்சள் - பீடி இலைகள் மீட்பு; சந்தேகநபர்கள் இருவர் கைது





மன்னார், கொந்தபிட்டி மற்றும் சிலாவத்துறை, அரிப்பு ஆகிய கடற்பரப்புகளில் நேற்று முன்தினம் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 370 கிலோவுக்கும் அதிகமான மஞ்சள் தொகை மற்றும் 294 கிலோ கிராமுக்கும் அதிகமான பீடி இலைகள் என்பனவற்றுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது, சட்டவிரோதமாகக் கடல் மார்க்கமாக நாட்டுக்குக் கொண்டுவர முயற்சித்த 13 சாக்குகளில் பொதியிடப்பட்ட 370 கிலோ 600 கிராம் உலர் மஞ்சளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், நேற்று முன்தினம் அரிப்பு கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது கடல் மார்க்கமாக நாட்டுக்குக் கொண்டுவர முயற்சித்த 03 சாக்குகளில் பொதியிடப்பட்ட 294 கிலோ 100 கிராம் பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த 33 மற்றும் 37 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்காக மன்னார் பொதுச் சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இதன்போது கைப்பற்றப்பட்ட மஞ்சள் மற்றும் பீடி இலைகள் என்பன விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் சுங்க காரியாலத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அனுராதபுரத்தில் இரு மாதங்களில் 36 கொரோனா மரணங்கள்

(அனுராதபுரம்)

அனுராதபுரம் மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் கொரோனா தொற்றினால் 42 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கடந்த மே மாதத்திலிருந்து இதுவரையான காலப்பகுதியில் 36 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாகவும் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆரியரத்ன தெரிவித்தார்.

அனுராதபுர மாவட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்து பணிப்பாளிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் ஏப்ரல் மாத பண்டிகைக் காலத்திற்கு முன்னரான காலப்பகுதியில் 750 தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 06 கொரோனா மரணங்கள் பதிவாகியிருந்தன. புதுவருடத்தின் பின்னர் ஏற்பட்ட கொத்தணிகளின் காரணமாக தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 700 தாண்டியுள்ளதுடன், 42 மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.இனங்காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள அனுராதபுரம் மெத்சிரி செவன சிறுநீரக விசேட வைத்தியசாலை மற்றும் நொச்சியாகம, கெப்பித்திகொல்லாவ, கலன்பிந்துனுவெள, வைத்தியசாலைகளில் சிகிச்சை அளித்துவருவதுடன் தீவிர கிகிச்சைப் பிரிவாக அனுராதபுரம் மெத்சிரி செவன வைத்தியசாலை பயன்படுத்தப்படுகின்றது.

அதற்கும் மேலதிகமாக அனுராதபுரம் கல்கிரியாகம பிரதேச வைத்தியசாலை தம்மன்னாவ வைத்தியசாலைகளுடன் ரம்பாவ வஹமல் கொள்ளாவ பகுதியிலுள்ள இராணுவத்துக்கு சொந்தமான களஞ்சியசாலையொன்றும் இடைநிலை சிகிச்சை நிலையமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அங்கும் அதிகளவிலான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக அனுராதபுரம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆரியரத்ன மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோதமாக புதையல் தோண்ட முயற்சித்த ஏழு பேர் கைது

(ஜூட் சமந்த)

புதையல் தோண்ட முயற்சித்த சந்தேகநபர்கள் ஏழு பேர் சிலாபம் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சிலாபம், ரம்பேபிட்டிய பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 03 ஹெக்ரேயர் நிலப்பரப்புடைய தென்னந்தோட்டத்தில் புதையல் தோண்டுவதற்கு சிலர் முயற்சிப்பதாக 119 என்ற பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப் பட்டுள்ளது.

சிலாபம், பங்கதெனியமற்றும் பல்லம ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த இடத்தின் உரிமையாளரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிலத்தின் உரிமையாளர் சிலாபம், பங்கதெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் புதையல் தோண்டுவதற்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவ்விடத்திலிருந்து நீர்ப்பம்பி, புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் சிலாபம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் புத்தளத்தில் ஒருவர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரமற்ற துப்பாக்கியை வைத்திருந்த நபரொருவர் புத்தளம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் புத்தளம் - குருநாகல் வீதியில் குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். புத்தளம், வெந்தேசி பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கியினூடாக சந்தேகநபர் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கியுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தங்க ஆபரணங்களைத் திருடிய சந்தேகநபர்கள் 08 பேர் கைது

திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி வீதியில் பயணித்த பெண்களின் தங்கச்சங்கிலிகளைத் திருடியதாகக் கூறப்படும் சந்தேகநபர்கள் எட்டு பேர் முந்தல் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், முந்தல் மற்றும் மதுரன்குளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய சந்தேகநபர்களினால் திருடப்பட்ட 08 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்களினால் திருடப்பட்ட 04 நீர்ப்பம்பிகள் மற்றும் தொலைக்காட்சி என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.



மேலும், கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களினால் திருடப்பட்ட தங்க ஆபரணங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்களை புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





விருதுகளின் வகை

- வருடத்திற்கான சிறந்த ஊடகவியலாளர் மேர்வின் டீ சில்வா விருது*
- வருடத்திற்கான சிறந்த புலனாய்வு ஊடகவியலாளர்*
- வருடத்திற்கான சிறந்த தனித்துவ செய்திக்கான விருது*
- வருடத்திற்கான இளம் செய்தியாளர் டென்சில் பீரிஸ் விருது*
- வருடத்திற்கான சிறந்த சுகாதாரம் மற்றும் மருத்துவ கட்டுரையாளர்**
- வருடத்திற்கான சிறந்த சூழலியல் அறிக்கையாளர்**
- வருடத்திற்கான சிறந்த விளையாட்டு செய்தியாளர்**
- வருடத்திற்கான சிறப்பாக வடிமைக்கப்பட்ட பத்திரிகை*
- வருடத்திற்கான சிறந்த வணிக மற்றும் நிதியியல் செய்தியாளர்**
- வருடத்திற்கான சிறந்த கேலிச்சித்திரம்**
- விஷேட சூழ்நிலைகளின் போது அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது.**
- வருடத்திற்கான சிறந்த புகைப்பட ஊடகவியலாளர்*
- வருடத்திற்கான சிறந்த பத்தி எழுத்தாளர் பீ.ஏ.சிறிவர்த்தன விருது.**
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தி எழுதப்பட்ட சிறந்த செய்தி / விவரணக்கட்டுரை**
- சமூக பிரச்சினைகள் தொடர்பான சிறந்த அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது.**
- வருடத்திற்கான சிறந்த விவரணக்கட்டுரையாளருக்கான உபாலி விஜயவர்த்தன விருது.**
- சிறந்த செய்தி இணையத்தளம்.**

* எந்தமொழியாயினும் ஒரே விருது
** சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு விருது

பதிவுசெய்யப்பட்ட பத்திரிகைக்குச் சொந்தமான இணையப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி அல்லது கட்டுரை அல்லது பத்தி என்பனவும் ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் அவ்வாறு இணையப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி அல்லது கட்டுரை அல்லது பத்தி என்பவற்றின் பிரதி குறித்த பத்திரிகை ஆசிரியரால் அல்லது இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : வியாழக்கிழமை - ஜூலை 15, 2021**

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான விருதுவழங்கல் நிகழ்வு நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

வெற்றியாளர்கள் சுயாதீன நடுவர் குழாம் ஒன்றால் தெரிவு செய்யப்படுவர்

பல்வேறு பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கக்கூடிய அறிவுறுத்தல் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய விண்ணப்பப்பத்திரத்தை இல.96 , பேர்னாட் சொய்சா மாவத்தை, (கிருலவீதி), கொழும்பு - 5. முகவரியிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது www.slpi.lk அல்லது www.pccsl.lk இணையத்தளங்களில் இருந்து இலவசமாக தரவிறக்கம் செய்யலாம்

ஒழுங்கமைப்பு : இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்

TEGOSL

# பயணத்தடையால் அத்தியாவசிய பொருட்களின்றி பலாக்காய் உண்ணும் வேவல்கெட்டிய மக்கள்



(க. மஹிந்தகுமார்)

இரத்தினபுரி வேவல்கெட்டிய மேல் பிரிவு தோட்டத்தில் 300 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் பெரும் சிரமத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றார்கள்.

தற்போது நாடு முழுவதும் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், நகரத்திற்கு செல்ல முடியாமல் தமக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்துகொள்ள முடியாமல் அத்தோட்ட மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாகவும் தெரிவிக்கின்றார்கள்.

அத்தோட்ட மக்கள் நாளாந்தம் கூலிவேலை செய்து வாழ்ந்து வருகின்றதாகவும் பயணத்தடையினால் அவர்களது வேலைகளையும் இழந்து நாளாந்தம் வாழ்க்கையை நகர்த்தி செல்லவும் முடியாமல் திண்டாடுவதாகவும் தெரிவித்தார்கள்.

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட நடமாடும் சேவை அத்தோட்டப் பகுதிக்கு செல்லாததால் அத்தோட்ட மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை கொள்வனவுசெய்வதற்கு முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் குறைந்த வருமானம் பேரும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்குவதாக கூறினார்கள். ஆனால், எமக்கு இதுவரை 5 ஆயிரம் ரூபா வழங்கவில்லை என்றும் அத்தோட்ட மக்கள் கவலை தெரிவித்தார்கள்.

நாடு முழுவதும் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மக்களை அதிகளவில் வேலைக்கு செல்ல வேண்டாம் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் அரசியல்வாதிகள் ஏன் எம்முடைய பிரச்சினைகளை தேடி பார்க்கின்றார்கள் இல்லை என்றும் அத்தோட்ட மக்கள் கேட்கின்றார்கள்.

தமக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை போதியளவு பெற்றுக் கொள்ள முடியாததால் அத்தோட்ட மக்கள் ஒருவேளை சோறும் இரண்டு பலாக்காய் போன்றவற்றையும் சாப்பிடுவதாக தெரிவித்தார்கள்.

# ஆயிரம் ரூபா தேவையென்றால் 26 கிலோ தேயிலை பறியுங்கள்

## தோட்ட நிர்வாகம் உத்தரவு : லங்கா தோட்ட மக்கள் போராட்டம்





(க.கிஷாந்தன்)

ஆயிரம் ரூபா சம்பளம் வேண்டுமென்றால் 26 கிலோ கொழுந்து பறிக்குமாறு தோட்ட நிர்வாகம் கட்டளையிடுகின்றது. அதுமட்டுமல்ல, வேலை நேரமும் அதிகரிக்கப் பட்டுள்ளது. இதனை ஏற்முடியாது. எமது தொழில் உரிமைகள் பாதுகாக்கப் படவேண்டும் - என வலியுறுத்தி மஸ்கெலியா, லங்கா தோட்டத் தொழி லாளர்கள் நேற்றுமுன்தினம் கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மலையக பெருந்தோட்டத் தொழிலா ளர்களுக்கு அடிப்படை நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என சம்பள நிர்ணய சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் வெளி யாகியுள்ளது.

முன்னர் செய்த வேலையின் அள வுக்கே இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது, மேலதிகமாக எதையும் செய்யவேண்டிய தில்லை என கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு விடுத்தன. எனினும், ஒரு மாதம் மட்டுமே எமக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. அதன்பின்னர் உரியவகையில் சம்பளம் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டும் லங்கா தோட்டத் தொழிலாளர்கள், அதற்கான காரணங்களையும் குறிப் பிட்டனர்.

ஆயிரம் ரூபா கிடைப்பதற்கு முன்னர் நாட்சம்பளத்துக்கு பெண்கள் 16 கிலோ கொழுந்து எடுக்கவேண்டும். தற்போது அந்த அளவு 20 கிலோவாக ஆக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு மூன்று தடவைகள் கொழுந்து அளக்கப்படும். ஒரு தடவைக்கு 2 கிலோ கழிக்கின்றனர். மூன்று தடவைக்கு ஆறு கிலோ கொமிஷன் அடிக்கின்றனர். அப்படியானால் ஆயிரம் ரூபா சம்பளத்துக்கு 26 கிலோ பறிக்க வேண்டும்.

கொழுந்து இல்லை. 18 கிலோ பறித்தால் கூட அரைநாள் சம்பளம் வழங்கப்படும் நிலை காணப் படுகின்றது.

ஆண் தொழிலாளர்கள் காலை 8 மணிக்குச்சென்று பிற்பகல் ஒரு மணிக்கு வந்துவிடுவர். தற்போது அவர்களுக்கான வேலை நேரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தோட்ட நிர்வாகத்தின் இந்த அணுகுமுறையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

எனவே, அரசாங்கமும், தொழிற் சங்கங்களும், தொழில் அமைச்சும் தலையிட்டு எமக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றனர் தொழிலாளர்கள்.

# கொட்டகலை பிரதேச வைத்தியசாலைக்கு ஐந்து ஐ.சி.யு. கட்டில்கள் வழங்கிவைப்பு



(பா.பாலேந்திரன்)

ஹற்றன், கொட்டகலை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி சாவித்திரி அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை முக்குலத்தோர் சங்கம் சுமார் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐந்து ஐ.சி.யு. கட்டில்களை கொட்டகலை பிரதேச வைத்தியசாலைக்கு வழங்கியது.

இலங்கை முக்குலத்தோர் சங்க செயலாளர் சுகுமாரன் தலைமையில் வி.டி.வேல்முருகன் மற்றும் ஜே.பி. ஜெயராம், திருகேஸ் செல்லசாமி, கரு பத்மனாதன், ஹற்றன் முக்குலத்தோர் சங்கம் சார்பாக சுப்புசாமி, ஆனந்தகுமார், தமிழ்ச்செல்வன், விஜேரட்ணம் ஆகியோரின் பூரண அனுசரணையில் இந்நிகழ்வு நடைபெற்றது.




# சட்டவிரோத மது விற்பனை; 3 நாட்களில் 17 பேர் கைது





(க.கிஷாந்தன்)

தனிமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில், டயகமவில் கடந்த 3 நாட்களுக்குள் சட்ட விரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட 17 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

75 சாராய போத்தல்களும், 570 லீற்றர் கசிப்பும், 325 லீற்றர் கோடாவும், கசிப்பு தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப் பட்டுள்ளன.

அதேபோன்று, தனிமைப்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து அத்தியாவசிய சேவை என்ற போர்வையில் இறைச்சிக்காக பசுமாட்டை கடத்திய மூவர் நேற்றுக் காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டயகம, சந்திரிகாமம் பகுதியிலிருந்து அக்கரபத் தனைக்கே இறைச்சிக்காக மாடு இவ்வாறு கடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் டயகம பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய டயகம எல்லைக்குள்ளேயே மடக்கிப்பிடிக்கப்பட்டனர். பசுமாடு மீட்கப்பட் டுள்ளதுடன், லொறியும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலால் சந்திரகாமம் பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அத்தியாவசிய சேவை என்ற போர்வையில் கடத்தலுக்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

# 1,875 எரிவாயு சிலிண்டர்களை பதுக்கிய மூவர் கைது

## சந்தேகநபர்கள் மீது வழக்கு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி, குருவிட்ட, நாலந்த, எல்லாவள பகுதியில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக 12.5 கிலோகிராம் நிறையுடைய ஆயிரத்து 875 எரிவாயு (கேஸ்) சிலிண்டர்களைப் பதுக்கிவைத்திருந்த மூன்று சந்தேகநபர்களை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இரத்தினபுரி, குருவிட்ட, நாலந்த, எல்லாவள தொழிற்பேட்டை பண்டகசாலை ஒன்றில் பதுக்கிவைத்திருந்த நிலையில் மேற்படி எரிவாயு சிலிண்டர்களை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் இரத்தினபுரி மாவட்ட காரியாலய அதிகாரிகள் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது வியாபாரத்தின் பங்காளர்கள் எனக் கூறப்படும் மூன்று சந்தேக நபர்களை அதிகாரிகள் கைதுசெய்துள்ளதுடன், எரிவாயு சிலிண்டர்களை பதுக்கிவைத்தல், அவற்றை விற்பனைசெய்ய மறுத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின்பேரில் இவர்கள் மீது வழக்கு தொடரவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரத்தினபுரி மற்றும் குருவிட்ட பிரதேசங்களில் இத்தினங்களில் 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் 18 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர்கள் தாராளமாக கிடைத்து வருவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.




# மக்கள் வசிக்கும் பகுதியில் பாதுகாப்பற்ற மின்கட்டமைப்பு

## ஒதுக்குப்புறமாக அமைக்கவும் கோரிக்கை


(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பொதுமக்கள் அதிகமாக வசிக்கும் இடமொன்றில் புதிய மின்மாற்றி கட்டமைப்பு பொருத்தப்பட்டுள்ளதால் தெரணியகல உடஹேன்கந்த பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் பெரும் ஆபத்துகளை எதிர்நோக்கியுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயமாக இரத்தினபுரி பிராந்திய பிரதான நிறைவேற்று மின்னிணைப்பு பொறியியலாளர் காரியாலயத்தில் பிரதேச மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் உடஹேன்கந்த பிரிவுக்கு புதிய மின்சார இணைப்பொன்று வழங்கப்பட்டுள்ளதுடன், ஒதுக்குப்புறமான பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பிரதான மின்மாற்றி கட்டமைப்பொன்று பொதுமக்கள் வசிக்கும் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த பியூஸ் கட்டமைப்பு இப்பகுதியில் அமைக்கப்பட்டதால் இப்பிரதேசத்தில் அடிக்கடி மின்சாரக் கோளாறு ஏற்படுவதாகவும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் வீடுகளிலுள்ள குழந்தைகள் சிறுவர்-சிறுமிகள் வயோதிபர்கள் பிராணிகளும் கூட அச்சத்தால் அதிர்ச்சி யடைவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.





அத்துடன், அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் வீடுகளிலுள்ள மின் உபகரணங்கள் மற்றும் மின் குமிழ்கள் பழுதடைந்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக் கின்றனர்

மேலும் மழைக்காலங்களில் இந்தப் பிரதேசத்தில் மரங்கள் முறிந்து மின்சாரக் கம்பிகளில் விழும் நிலையில் உயிராபத்தை ஏற்படுத்தும் ஆபத்தும் காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். எனவே, இப்பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள இந்த பியூஸ் கட்டமைப்பை பொதுமக்களுக்கு பாதிப்பில்லாத - மக்கள் வசிக்காத ஒதுக்குப் புறமான இடமொன்றில் பொருத்துமாறு பிரதேச மக்கள் இரத்தினபுரி பிராந்திய மின்சார இணைப்பு பொறியியல் காரியாலய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கிறேட்வெஸ்டனில் முதல் கொரோனா மரணம்

(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை, கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தில் 88 வயது முதியவர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

கொரோனா விதிமுறைகளுக்கமைய இவருடைய உடல் நுவரெலியா மயானத்தில் நேற்று தகனம் செய்யப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

இவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தைச் சேர்ந்த 4 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேர் தற்போது சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# விக்டோரியாவுக்கு அருகில் 1.94 அளவில் நில அதிர்வு

விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு அருகில் ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை விக்டோரியா நீர்த் தேக்கத்திற்கு அருகில் 1.94 அளவில் சிறிய அளவிலான நில அதிர்வு உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இது தொடர்பில் எவ்வித அச்சமும் கொள்ளத்தேவையில்லை என புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

# பயணத்தடைக்குள்ளும் குருந்தூர்மலை விகாரைக்கான பொதுமண்டபத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது



(வன்னி செய்தியாளர்)

நாட்டில் கொவிட்-19 தீவிர பரவல்நிலை காரணமாக பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், சர்சைக்குரிய அகழ்வாராய்ச்சிப் பணிகள் இடம்பெற்றுவந்த முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் புனருத்தாரணம் செய்யப்பட்டுவரும் குருந்தாவசோக விகாரைக்கான பொது மண்டபத்துக்கும் தொல்லியல் திணைக்கள அலுவலகத்துக்குமான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இராணுவத்தினரின் பங்கேற்புடன் இடம்பெற்றுள்ளது.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (13.06.2021) முல்லைத்தீவு பாதுகாப்புப் படைகளின் பிரதானி மேஜர் ஜெனரல் உபாலி ராஜபக்ஷவின் பங்கேற்புடன் இடம்பெற்றுள்ளது. தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன், திணைக்களத்தின் திட்டங்களின் படி, 13.06.2021 அன்று இந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டதாக குருந்தூர்மலை விகாரைக்கான உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மே 18 அன்று குருந்தூர்மலையில் தொல்பொருள்துறை, புராதன ஸ்தூபியின் அகழ்வாராய்ச்சியை முடித்த நிலையில் குருந்தாவசோக ரஜமஹா விகாரைக்கான புனருத்தாரண பணிகள் பிரித்தோதும் பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், பண்டைய சிலை இல்லமும் விரைவில் தோண்டப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.

கடந்த ஒரு மாதகாலமாக பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இறுக்கமான சுகாதார நடைமுறைகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த மாதம் நூற்றுக்கணக்கான இராணுவத்தினரின் பங்கேற்புடன் விகாரைக்கான பூஜை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்நிலையிலேயே மீண்டும் மண்டபங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. ஒன்றுகூடுவதற்கும், ஆலயங்களில் சமய நிகழ்வுகளை நடத்துவதற்கும் தடைகள் விதிக்கப்பட்டு கைதுகள் இடம்பெற்றுவரும் நிலையில் அந்த நிலைமைகளுக்கு மாறாக குருந்தூர்மலையில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு இராணுவத்தினரின் பூரண ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே நில அளவைத் திணைக்களத்தால் 79 ஏக்கர் நிலங்கள் குருந்தூர்மலை தொல்லியல் பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்டு எல்லையிடப்பட்டுள்ள நிலையில், குருந்தூர்மலை புராதன விகாரையின் பிரதான தளத்தினை தற்போது 420 ஏக்கர் என வரையறுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், வடக்கின் பாரிய சிதைவுகளைக்கொண்ட - நிலப்பரப்பைக்கொண்ட பௌத்த பூமி குருந்தூர் மலை எனவும், மேலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் குருந்தூர்மலை விகாரைக்கான புனித பூமி தொல்பொருள் தளத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று தொல்பொருள்துறை குறிப்பிடுவதாகவும், குருந்தூர்மலை விகாரைக்கான உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையும் பலர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குருந்தூர் மலையை சூழவும் தமிழ் மக்களுக்கு சொந்தமான வயல் நிலங்கள், குடியிருப்பு விவசாயக் காணிகள் என்பன காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் பயணத்தடையால் வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்டிய விக்னேஸ்வரன்



நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத்தடையால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனால் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பாரதிபுரம், மலையாளபுரம், கோணாவில் கிழக்கு, செல்வாநகர், திருவையாறு, பரந்தன், பிரமந்தனாறு, கல்லாறு, சாந்தபுரம், அம்பாள்குளம் ஆகிய கிளிநொச்சி மாவட்டத்தில் பயணத்தடையால் அதிகம் பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த அடையாளப்படுத்தப்பட்ட உதவி தேவைப்படுவோருக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரனுடன் இணைந்து தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்கள் வாழ்வாதாரத்துக்குத் தேவையான பொருட்களை வழங்கினர்.

குறித்த வாழ்வாதார உதவிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தனது தனிப்பட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபா வழங்கியதுடன், சிட்னி தமிழ் உறவுகள் சிலரும் நிதிப் பங்களிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# மன்னார் ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றுகின்ற 10 பேர் உட்பட 15 பேருக்கு கொரோனா தொற்று

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வினோதன் தெரிவிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் ஆடைத்தொழிற்சாலையில் கடமைற்றுகின்ற 10 பேர் உட்பட 15 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், மாவட்டத்தில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 572 ஆக அதிகரித்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனை முடிவுகளின்படி நேற்று முன்தினம் புதன்கிழமை மேலும் 15 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் எமில் நகர், சாந்திபுரம் மற்றும் தாராபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

மேலும், மன்னார் ஆடைத்தொழிற்சாலையில் ஒவ்வொரு வாரமும் மேற்கொள்ளப்படுகின்ற அன்ரிஜன் பரிசோதனைகளின்போது 70 பேருக்கு அப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவற்றில் 10 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்கள் சின்னக்கடை, சாந்திபுரம், எமில் நகர், பேசாலை, விடத்தல் தீவு, பரப்புக்கடந்தான் மற்றும் பண்டிவிருச்சான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் 6 பேர் பெண்களாகவும், 4 பேர் ஆண்களாகவும் உள்ளனர். பெண்கள் தாராபுரத்தில் அமைந்துள்ள இடைநிலை சிகிச்சை நிலையத்திற்கும், ஆண்கள் வவுனியா இடைநிலை சிகிச்சை நிலையத்திற்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

ஜூன் மாதம் தற்போதுவரை 65 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னாரில் மொத்தமாக 572 பேரும், இவ்வருடம் 555 பேரும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தாராபுரத்தில் அமைந்துள்ள இடைநிலை சிகிச்சை நிலையத்தில் இதுவரை 311 கொரோனா தொற்றுக்குள்ளானோர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தனர்.

அவர்களில் 239 பேர் சிகிச்சைகளை நிறைவு செய்து தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். இவர்களில் 45 பேர் மன்னாரைச் சேர்ந்தவர்கள். அவர்களில் 44 பேர் சிகிச்சைகளை நிறைவுசெய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் சமூகத்தில் கொரோனா தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள துரித செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். மக்கள் சுகாதார வழிமுறைகளை உரியமுறையில் கடைப்பிடித்து தொற்றுக்குள்ளாகாமல் உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள் - என்றார்.

மேலும், மருதமடு அன்னையின் ஆடித் திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 2ஆம் திகதி திருப்பலியுடன் நிறைவடையவுள்ளது.

இம்முறை அரசால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளுக்கமைவாக ஒரே நேரத்தில் திருப்பலியில் கலந்துகொள்ள 30 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும். ஜூலை மாதம் 2ஆம் திகதி நடைபெறும் திருவிழா திருப்பலி ஒன்றில் ஒரே நேரத்தில் 30 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும்.

அவர்களின் பெயர் விபரங்கள் முன்கூட்டியே எமக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அபாயம் அதிகமாகவுள்ள பகுதிகளிலிருந்து திருவிழா திருப்பலிகளில் கலந்துகொள்கின்றவர்களுக்கு நாங்கள் அன்ரிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வோம்.

திருப்பலியின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு ஒரு திருப்பலியில் 30 பேர் மாத்திரம் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இம்முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன - என அவர் மேலும் தெரிவித்தார்.




# ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவானோர் ஒன்லைன் ஊடாக போராட்டம்




(ஏ.எல்.எம்.ஷினாஸ் -பெரியநீலாவணை )

இரண்டாம்மொழி ஆசிரியர் பயிற்சிக்கு 2019ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட 1300 பயிலுனர்களுக்கும் உடனடியாக நியமனம் வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் நாடு தழுவிய ரீதியில் ஒன்லைன் ஊடாக வீட்டிலிருந்தவாறு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

2019ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியின்போது அலரி மாளிகையில் வைத்து அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் எமக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினூடாக பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்துள்ளோம். எனினும், எமக்கான ஆசிரியர் நியமனம் ஆட்சி மாற்றம் காரணமாக வழங்கப்படாமலுள்ளது. ஆனால், இதற்கென சுமார் 400 மில்லியன் ரூபா நிதி அப்போதைய ஆட்சியில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததாக பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதி கோரி ஜனாதிபதி செயலகம் மற்றும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு எதிரில் பல ஆர்ப்பாட்டங்கள் நடத்திய போதிலும், எமக்கு நம்பிக்கையூட்டும் ஒரு பதில் 27.02.2020 அன்று ஜனாதிபதி செயலகத்தின் எதிரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது கிடைத்தது. அப்போதைய ஜனாதிபதியின் செயலாளர் எங்கள் ஆசிரியர் பயிற்சித் திட்டத்தை விரைவில் ஆரம்பிப்போம் என்று தெரிவித்தார். துரதிர்ஷ்டவசமாக கொரோனா பரவலைக் காரணம் காட்டி இந்த வேலைத் திட்டத்தை பிற்படுத்துவது கவலைக்குரிய விடயமாகும் என இம்மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

நல்லிணக்கத்தை அடைவதென்பது, அப்பாவி படித்த இளைஞர்களை ஏமாற்றுவதன் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வரை மட்டும்தானா என்பதே எங்கள் ஒரே கேள்வி. அரசியல் கட்டமைப்பிற்கு அப்பால் இந்த பிரச்சினைக்கு நியாயம் செய்ய முடியாமல் போய்விட்டதா? மோசடியை ஆராய்ந்து விரைவில் பாதிக்கப்பட்டு நடுத்தெருவில் நிற்கும் எமக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும். குறித்த இந்த விடயத்தில் ஜனாதிபதி கவனம் செலுத்தி ஆசிரியர் நியமனங்களை வழங்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அட்டாளைச்சேனையில் திடீர் சுகாதார பரிசோதனைகள்



(அட்டாளைச்சேனை)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை முதல் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய காரியாலயத்தின் எதிரில், பிரதான வீதிகளில் பயணம் செய்த (அக்கரைப்பற்று - கல்முனை) வாகனங்களை பரிசோதனை செய்து, உரிய அனுமதிப்பத்திரமின்றி பயணித்தவர்களுக்கு பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவிற்குட்பட்ட ஒலுவில், பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனைப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் (16.06.2021) கொரோனா தொற்றுக்குள்ளான 12 பேர் இனங்காணப்பட்டனர்.

இவ்விடயங்களை கவனத்தில் கொண்டு அட்டாளைச்சேனை சுகாதாரப்பிரிவில் கொரோனா தொற்று தீவிரமடைவதைத் தொடர்ந்து அதனை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் அதிரடி நடவடிக்கைகள் இதன்போது அட்டாளைச்சேனை சுகாதார பிரிவில் முழுவதுமாக நடைபெற்றன.

இத்திடீர் கண்காணிப்பு நடவடிக்கையில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் ஈ.ரீ.சலீம், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா, பொது சுகாதார பரிசோதகர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இதில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்கினர்.

இதன்போது அனுமதியின்றி பயணித்த ஒருவருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது அவர் கொரோனா நோயாளராக அடையாளப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மருதமுனையில் உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ் -பெரியநீலாவணை )

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கணவனை இழந்த பெண்கள் மற்றும் தனிமைப்பட்ட நிலையில் வாழ்ந்து வரும் ஆண்களுக்கு நிவாரண உணவுப் பொதிகளை வழங்கிவைக்கும் நிகழ்வு மருதமுனையில் நடைபெற்றது.

ஆன்மீகத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட சமூகசேவையாளர் ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர் ஏ.கே.எம்.அன்சார் தனது முயற்சியின் பலனாக இவற்றை வழங்கி வருகின்றார்.

வீடுகளுக்குள் முடங்கியுள்ள மக்கள் எதிர்கொள்ளும் வறுமை நிலை தொடர்பாக தனக்கு அறிமுகமான பலரிடமுமிருந்து உதவிகளைப் பெற்று கடந்த ஒரு வாரகாலமாக இந்தப்பணியை அவர் செய்து வருகின்றார்.

இதன்போது சிறு குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு பால்மா உதவிகள், உணவுப் பொதிகள் என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன. சமூக மட்டத்தில் பல்வேறு சிவில் அமைப்புக்கள், பள்ளிவாசல் நிர்வாகத்தினர் இருக்கின்ற போதிலும் இவரது பணி பாராட்டப்பட வேண்டியது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மருதமுனை பிரதேசத்தை அண்டிய தமிழ் சகோதரர்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாய் வைத்தியசாலைக்கு படுக்கைகள் வழங்கிவைப்பு



திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவன் அத்துகோரளவின் வேண்டுகோளுக்கிணங்க கந்தளாய் தள வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு நேற்று முன்தினம் (16) ஒரு தொகை படுக்கைகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன திருகோணமலை மாவட்டத் தலைவர் மற்றும் பொறியியல் முன்னணியின் உறுப்பினர்கள் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# முதலாவது டெஸ்ட் சம்பியனாகப்போவது யார்?



## இந்தியா – நியூஸிலாந்து அணிகள் இன்று பலப்பரீட்சையை ஆரம்பிக்கின்றன

## இலங்கை அணிக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் பணப்பரிசு

**ஏ. அகீல் சிஹாப்**

கிரிக்கெட் விளையாட்டின் ஆரம்பம் டெஸ்ட் போட்டிகள்தான். டெஸ்ட் போட்டிகளிலிருந்துதான் கிரிக்கெட் என்ற விளையாட்டு உலகிற்கு அறிமுகமானது. அதனைத் தொடர்ந்துதான் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்கொண்ட போட்டிகள் கிரிக்கெட் உலகிற்கு அறிமுகமான ஒரு கிரிக்கெட் வீரரின் உண்மையான திறமையை டெஸ்ட் போட்டியின் ஊடாகத்தான் அறியமுடியும் என பல ஜாம்பவான்கள் சொல்லியிருக்கிறார்கள். காரணம், ஐந்து நாட்கள் நிலைத்துநின்று விளையாடுகின்ற அந்த விளையாட்டின் மூலம்தான் ஒரு வீரரின் உண்மையான திறமை வெளிப்படுகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்கொண்ட போட்டிகள் கிரிக்கெட் உலகிற்கு அறிமுகமானதைத் தொடர்ந்து குறிப்பாக, இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகள் அறிமுகமானதைத் தொடர்ந்து கிரிக்கெட்டின் ஆரம்பம் என அழைக்கப்படுகின்ற டெஸ்ட் போட்டிகளுக்கு இரசிகர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்ல ஆரம்பித்தது. இதனை உணர்ந்த சர்வதேச கிரிக்கெட் பேரவையானது டெஸ்ட் போட்டிகளுக்கு உயிரூட்டும் வகையிலும், டெஸ்ட் விளையாட்டிலும் சிறந்த அணியை தெரிவுசெய்ய வேண்டும் என்ற வகையிலும் கடந்த 2019ஆம் ஆண்டு 'ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்' என்ற ஒரு தொடரை அறிமுகம் செய்தது.

டெஸ்ட் தரவரிசையில் முதல் 9 இடங்களிலுள்ள அணிகள் பங்குபற்றும் குறித்த ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரானது இரண்டு வருடங்கள் நடைபெறுகின்ற தொடராக அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பமான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடருடன் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் ஆரம்பமானது.

இரண்டு வருட காலப் பகுதிக்குள் 27 தொடர்களில் மொத்தமாக 71 போட்டிகள், குறித்த டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் நடைபெறுவதாக திட்டமிடப்பட்டிருந்தது. இருந்தாலும் முழு உலகையும் காவுகொண்ட கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஏராளமான டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர்கள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன. எனினும், டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை குறித்த காலப்பகுதிக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் பேரவையானது புதிய திட்டத்தைக் கொண்டுவந்தது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட போட்டிகளுக்கு புள்ளிகளை வழங்கி, வீதாசாரத்தின் அடிப்படையில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் இறுதிப் போட்டியில் விளையாடும் திட்டத்தை அறிமுகம் செய்தது. ஆரம்பத்தில் அதிக புள்ளிகளை பெறும் இரு அணிகள்தான் இறுதிப் போட்டியில் விளையாடும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் மொத்தமாக 520 புள்ளிகளுடன் 72.2 சதவீதத்தைப் பெற்று முதலிடத்தைப் பிடித்த இந்திய அணியும், 420 புள்ளிகளுடன் 70 சதவீதத்தைப் பெற்று இரண்டாமிடத்தைப் பிடித்த நியூஸிலாந்து அணியும் இன்று இங்கிலாந்தின் சவுதம்டண், 'த ரோஸ் போல்' மைதானத்தில் ஆரம்பமாகும் இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடத்துகின்றன. குறித்த போட்டி இலங்கை நேரப்படி மாலை 3 மணிக்கு ஆரம்பமாகிறது.

வெற்றி சதவீதத்தின் அடிப்படையில் இறுதிப் போட்டிக்கான இரு அணிகள் தெரிவுசெய்யப்பட்டதால் நியூஸிலாந்து அணியை விடவும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட இங்கிலாந்து அணியால் (442) இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் சம்பியனாகும் அணிக்கு 1.6 மில்லியன் அமெரிக்க டொலர் பரிசாக வழங்கப்படுகின்ற அதேவேளை, டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்கும் அணிக்கு வழங்கப்படுகின்ற 'டெஸ்ட் மேஸ்' (Test Mace) கிண்ணமாக வழங்கப்படவுள்ளது. மேலும் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்து இரண்டாவது இடத்தைப்பெறும் அணிக்கு 8 இலட்சம் அமெரிக்க டொலர் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், தரவரிசையில் இறுதி 4 இடங்களைப் பிடித்துள்ள அணிகளுக்கு தலா ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் பணப்பரிசு வழங்கப்படவுள்ளது. அந்தவகையில் எட்டாமிடத்தை பிடித்த இலங்கை அணிக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் வழங்கப்படவுள்ளது.

விராட் கோஹ்லி தலைமையில் இந்திய அணியானது இதுவரையில் எந்த விதமான ஐ.சி.சி தொடரையும் கைப்பற்றவில்லை. அதேபோன்றுதான் கேன் வில்லியம்சன் தலைமையில் நியூஸிலாந்து அணியும் எந்தவொரு ஐ.சி.சி. தொடரையும் கைப்பற்றவில்லை. கேன் வில்லியம்சன் தலைமையில் நியூஸிலாந்து அணி கடந்த 2019ஆம் ஆண்டு ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரில் இறுதிப் போட்டியில் தோல்வியை தழுவியிருந்தது.

இவ்வாறான நிலையில் இரு அணிகளினதும் குழாமை பார்க்கின்றபோது இரண்டும் சம பலம் பொருந்திய அணிகளாக காணப்படுகின்றன. முதல் தடவையாக நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் சம்பியன் மகுடத்தை எந்த அணி சுடப்போகிறது என்பது தொடர்பிலான எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிறது.

இன்று ஆரம்பமாகும் இறுதிப்போட்டியின் இறுதியும், ஐந்தாவதுமான நாள் ஆட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. எனவே ஐந்து நாட்களும் போட்டி நடைபெறுமா அல்லது அதற்கிடையில் இறுதி முடிவு எட்டப்படுமா என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்கலாம்.

POINTS TABLE Powered by MRF TYRES
AS ON 12 JUNE 2021
ICC WORLD TEST CHAMPIONSHIP

| | PCT (%) | POINTS | SERIES | MATCHES WON | MATCHES LOST | MATCHES DRAWN |
|---|---|---|---|---|---|---|
| INDIA | 72.2 | 520 | 6 | 12 | 4 | 1 |
| NEW ZEALAND | 70.0 | 420 | 5 | 7 | 4 | 0 |
| AUSTRALIA | 69.2 | 332 | 4 | 8 | 4 | 2 |
| ENGLAND | 61.4 | 442 | 6 | 11 | 7 | 3 |
| PAKISTAN | 43.3 | 286 | 5.5 | 4 | 5 | 3 |
| SOUTH AFRICA | 37.8 | 204 | 5* | 4 | 8 | 0 |
| WEST INDIES | 30.3 | 200 | 6* | 3 | 7 | 2 |
| SRI LANKA | 27.8 | 200 | 6 | 2 | 6 | 4 |
| BANGLADESH | 4.8 | 20 | 3.5 | 0 | 6 | 1 |

ICC WORLD TEST CHAMPIONSHIP (2019-2021)

### நியூஸிலாந்து அணியின் குழாம்

கேன் வில்லியம்சன் (தலைவர்), டொம் ப்ளுன்டெல், ட்ரெண்ட் போல்ட், டிவோன் கோன்வே, கொலின் டி க்ரெண்ட்ஹோம், மெட் ஹென்றி, கெயில் ஜமிசன், டொம் லேதம், ஹென்றி நிக்கொலஸ், அஜாஸ் பட்டேல், டிம் சௌத்தி, ரோஸ் டைலர், நைல் வேக்னர், பி.ஜே. வெட்டிங், வில் யங்.

### இந்திய அணியின் குழாம்

விராட் கோஹ்லி (தலைவர்), அஜிங்கியா ரஹானே (உப தலைவர்), ரோஹிட் சர்மா, சுப்மன் கில், செட்டீஸ்வர் புஜாரா, ஹனுமா விஹாரி, ரிஷப் பண்ட், விருதிமான் சாஹா, ரவிச்சந்திரன் அஷ்வின், ரவீந்திர ஜடேஜா, ஜெஸ்பிரிட் பும்ரா, இஷாந்த் சர்மா, மொஹமட் ஷமி, உமேஷ் யாதவ், மொஹமட் சிராஜ்.







# பிரான்ஸில் இனி முகக்கவசம் கட்டாயமில்லை: தொற்று குறைந்ததால் தளர்த்தமென அறிவிப்பு



பிரான்ஸில் கொவிட் தொற்று பாதிப்பு குறைந்துள்ளதாலும், தடுப்பூசி போடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாலும் வெளியிடங்களில் முகக்கவசம் கட்டாயம் எனும் விதியை நேற்று வியாழன்முதல் தளர்த்துவதாக அந்நாட்டு பிரதமர் ஜோன் கெஸ்டெக்ஸ் அறிவித்துள்ளார்.

சுமார் 7 கோடி மக்கள் தொகைகொண்ட பிரான்ஸில், செவ்வாயன்று தினசரி தொற்று பாதிப்பு 3,200 என்ற எண்ணிக்கைக்கு வந்திருக்கிறது. 2020 ஓகஸ்ட்டுக்குப் பின் இதுவே அந்நாட்டின் குறைந்தபட்ச பாதிப்பாகும். கடந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன், நாட்டில் தொற்று பாதிப்பை 5 ஆயிரமாக குறைக்க திட்டமிட்டார். அவரது இலக்கை காட்டிலும் தொற்று பாதிப்பு சரிந்துள்ளது.

இதனால் அந்நாட்டு அரசு கட்டுப்பாடுகளை நீக்கி அறிவித்துள்ளது. அமைச்சரவை கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த பிரதமர் ஜோன் கேஸ்டெக்ஸ், "நேற்று வியாழன்முதல் வெளியிடங்களில் கட்டாய முகக்கவசம் என்பது சில விதிவிலக்குகளுடன் நீக்கப்படும். நெரிசலான இடங்களிலும், அரங்கங்களிலும் தேவைப்படும். கொவிட் ஊரடங்கு உத்தரவு ஜூன் 20 அன்று இரத்துச்செய்யப்படும். நாட்டின் சுகாதார நிலை எதிர்பார்த்ததைவிட வேகமாக முன்னேறியிருக்கிறது. கோடைகால முடிவில் (செப்டெம்பர்) சுமார் 3.5 கோடி மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி போட அரசாங்கம் இலக்குவைத்துள்ளது" - என்றார்.

# ஜப்பானில் 90 வயது ஜிம் பயிற்சியாளர்

**90** வயதில் பெரும்பாலானவர்களால் நடக்கக்கூட முடியாது. ஆனால், 90 வயதில் ஜிம் பயிற்சியாளராகக் கலக்கிவருகிறார் டாக்கிஷிமா மீகா. தினமும் பல மணிநேரம் உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு என்றிருக்கும் இவர், ஜப்பானின் மிக வயதான ஜிம் பயிற்சியாளராக புகழ்பெற்றுள்ளார்.

கடந்த ஜனவரியில் 90ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய டாக்கிஷிமாவைப் பார்த்தால் 60 வயது என்றுகூடச் சொல்ல முடியாது. 20 வயது இளைஞர்கள்கூட இவரைபோல் சுறுசுறுப்பாக இருக்க முடியாது. கட்டுக்கோப்பான உடல், நேர்மறையான சிந்தனை, முகம் முழுக்கப் புன்னகையோடு இருப்பதால் தனக்கு இந்த இளமையான தோற்றம் சாத்தியமாகியிருப்பதாகச் சொல்கிறார் இவர்.

டாக்கிஷிமாவுக்குத் தன் உடல் மீது 65 வயதில்தான் அக்கறை ஏற்பட்டது. அப்போது இவரது உடல் எடை அதிகமாக இருந்தது. சாதாரணமான உடற்பயிற்சிகளில்கூட அவருக்கு நாட்டமில்லை.

"வீட்டிலேயே உடற்பயிற்சி செய்யாமல் இருந்தேன். உடற்பயிற்சி நிலையத்துக்குப் போவது பற்றிய சிந்தனை எல்லாம் எனக்கு இருந்ததேயில்லை. நான் எடை அதிகமாக இருந்தது என் கணவருக்குப் பிடிக்கவில்லை. ஆனால், நான் எடை அதிகம் என்பதை ஒப்புக்கொள்ளாமலே இருந்தேன். இறுதியில் அவர் சொன்ன வார்த்தைகள் என்னை உடற்பயிற்சி நிலையைத்தை நோக்கி ஓட வைத்துவிட்டன. 5 ஆண்டுகளுக்குப் பிறகு 15 கிலோ எடை குறைந்திருந்தேன். ஆனாலும் தொடர்ந்து உடற்பயிற்சி செய்துகொண்டேயிருந்தேன். ஏனென்றால், இப்போது எனக்கு உடற்பயிற்சியின் மீது தீராக் காதல் ஏற்பட்டுவிட்டது. ஆண்டுக்கணக்கில் முதுமையை எட்டிவிட்டாலும் பார்ப்பதற்கு இளமையாகவே தெரிகிறேன்" என்கிறார் டாக்கிஷிமா.

பொதுவான உடற்பயிற்சிகளை மேற்கொண்டவர், பிறகு கால்களை வலிமையாக்குவதற்கான பயிற்சிகளை எடுத்துக்கொண்டார். அடுத்து பரந்த தோள்களை உடற்பயிற்சிகளின் மூலம் பெற்றார். அதற்குப் பிறகு குறுகிய எடைக்கான பயிற்சிகளை மேற்கொண்டு, அதையும் அடைந்துவிட்டார். இப்போது உடல் அவர் சொல்வதை எல்லாம் கேட்கும் நிலைக்கு வந்துவிட்டது.

தினமும் இரவு 11 மணிக்குத் தூங்கச் செல்கிறார். 4 மணிநேரம் மட்டுமே தூக்கம். அதிகாலை 3 மணிக்கு எழுந்துவிடுவார். 4 கி.மீ. தூரம் நடப்பார். 3 கி.மீ. தூரம் மெதுவாக ஓடுவார். 1 கி.மீ. தூரத்துக்குப் பின்னோக்கி நடப்பார். சமச்சீரான, எளிய காலை உணவைச் சாப்பிடுவார். சிறிதுநேரம் வீட்டு வேலைகளில் மூழ்குவார். தொலைக்காட்சி நிகழச்சிகளைப் பார்ப்பார். உணவு அதிகம் சாப்பிட்டால் தூக்கம் வரும் என்பதால், குறைவான அளவில் மதிய உணவு. மாலை தீவிரமான உடற்பயிற்சி. இரவில் பிடித்த உணவு. இவைதான் டாக்கிஷிமாவின் அன்றாட நடவடிக்கைகள்.

"79 வயதில்தான் என்னுடைய ஜிம்மில் சேர்ந்தார் டாக்கிஷிமா. 8 ஆண்டுகளில் ஒரு பயிற்சியாளருக்குரிய அனைத்து விடயங்களையும் கற்றுத் தேர்ந்துவிட்டார். இவ்வளவு திறமையானவரை ஒரு மாணவியாக வைத்துக்கொள்வதில் எனக்கு விருப்பம் இல்லை. அவரை பயிற்சியாளராக மாற்றினேன். டாக்கிஷிமா அதை ஏற்றுக்கொள்ளவேயில்லை. கட்டாயப்படுத்தி, 87 வயதில் பயிற்சியாளராக மாறினார். அவர் பயிற்சி செய்வதும் கற்றுக்கொடுப்பதும் அவ்வளவு ரசனையாக இருக்கும். இனிமையாகப் பேசுவார். அவரின் புன்னகையும் நேர்மறையான பேச்சுகளும் எல்லோரையும் கவர்ந்துவிடும். மிகவும் அன்பானவர்" என்று புகழ்கிறார் ஜிம் உரிமையாளரான நாகாசாவா.

கொவிட் பெருந்தொற்று காரணமாக ஜிம்மை வாரம் முழுவதும் நடத்த இயலவில்லை. அதனால், வாரம் ஒரு முறைதான் இப்போது வகுப்பெடுக்கிறார் டாக்கிஷிமா. மீதி நேரத்தில் தன் உடற்பயிற்சிகளில் கவனம் செலுத்துகிறார்.

ஜப்பானில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நூறு வயதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலரும் டாக்கிஷிமாவைப் பார்த்து உத்வேகம்கொண்டு, உடற்பயிற்சிகளில் ஆர்வம் காட்டிவருகிறார்கள்.







Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7